₹10

fmpb


# அறைகூவல்

Volume 51 Issue 2 February 2021



**உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்.**

(நீதிமொழிகள் 16:3)




# ஆரம்ப வரிகள்...

**தே**வனுடைய மகத்துவமான ஒரு கிரியைதான், “திட்டமிடல்” ஆகும். ஆம், திட்டமிடலுக்கு ஆரம்பமே தேவன் தான்! நம்முடைய ஊழியத்தைத் திட்டமிடாமல், ஏதேச்சையாக நடத்துவதைத் தேவன் ஒருபோதும் விரும்புவதில்லை. திட்டமிடல் என்கிற வார்த்தை வேதாகமம் முழுவதும் 205 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருச்சபை நாட்டும் மிஷனெரிப்பணிக்கான திட்டமிடல் வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். நமது ஆண்டவர் திட்டமிடுபவர் மட்டுமல்லாது, அத்திட்டங்களின் வளர்ச்சிக்கான முக்கிய அம்சமாகவும் காணப்படுகிறார். ஆகையால் சிறந்தமுறையில் திட்டமிட்டுச் செயல்படுவதற்காக, நாம் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருத்தல் மிகவும் அவசியமானது.

தேவன் மிகவும் சிறப்பாகத் திட்டமிடுபவராவார். தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியைகளைப் பார்க்கும்போது, அவருடைய திட்டமிடல் நமக்கு மிகவும் வியப்பை அளிக்கிறது. அவருடைய ஒவ்வொரு நாளின் படைப்பும்கூட, முந்தைய நாளின் தொடர்ச்சியாகவும் ஒன்றோடொன்று இசைந்திருக்குமாறும் படைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அவர் ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்ததில்கூட, அவர்கள் தேவசாயலில் இருக்க வேண்டும் என்கிற மாபெரும் திட்டம் இருந்ததைக் காணலாம் (ஆதி.1:26). அதுமட்டுமல்லாமல் தேவன்– மோசே, யோசுவா, தாவீது போன்றவர்களுக்குக் கொடுத்த விரிவான அறிவுறுத்தல்களின் மூலமும் அவரைத் ‘திட்ட மிடுபவராக’ நாம் தெளிவாக அறியலாம். இயேசுவின் ஊழியமெல்லாம், தேவனுடைய அநாதி திட்டத்தின் அம்சமாகவே காணப்படுகிறது. ஆதிமனிதன் பாவத்தில் வீழ்ந்தபோது, இயேசுகிறிஸ்து மேசியாவாக மனுக்குல இரட்சிப்புக்கென வெளிப்படும் மகத்தான திட்டத்தைத் தேவன் ஏற்கனவே உண்டுபண்ணி வைத்திருந்ததைக் காண்கிறோம். “இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே” (லூக்.19:10) இயேசு இவ்வுலகில் மனுஷகுமாரனாக வெளிப்பட்டார்; அவரது முழு வாழ்க்கையும் மனுக்குலத்திற்கு இரட்சிப்பை நல்குவதற்கான தேவனின் திட்டமாகவே காணப்பட்டது.

தேவனுடைய திருவுளச்சித்தம், பூமியில் அவரது ராஜ்யத்தை நிறுவுவதும் அவருடைய பிள்ளைகளால் அதை ஆளுகை செய்வதுமாகும். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகும், அவர் தமது சீஷர்களையும், பின்னர் மிஷனெரிகளையும் கொண்டு உலகமெங்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியைச் செய்வதற்கான அநாதி திட்டம் கொண்டிருந்தார் (மாற்கு 16:15&16; அப்.1:8).

ஆம், உலகிலேயே மிகச்சிறந்த பணி தேவஊழியமாகும். கிறிஸ்துவின் ஊழியத்தைத் திறம்படச்செய்வதற்கு அதிக விலைக்கிரயம் செலுத்துதல் அவசியம். இயேசுகிறிஸ்துவின் ஊழிய முன்மாதிரி–நாம் சீராகத் திட்டமிட்டு, வீரியத்துடனும் விவேகத்துடனும் தேவனுடைய இராஜ்யத்தை இவ்வுலகில் நிறுவுவதற்கு நமக்கு அழைப்பு விடுக்கிறது. எனவே மிஷனெரிப்பணியில் நமது பங்களிப்பு, திட்டமிடுதலை அடிப்படையாகக் கொண்டு மிகச் சிறப்பானதை வெளிக்கொணர்வதாக அமையவேண்டும். தேவப்பிரதிநிதிகளாக, ஊழியக்காரர்களாக பவுலைப்போல அழைப்பில் உறுதியாகவும், ஊழியத்திட்டமிடலில் முனைப்பாகவும் தேவனைச் சார்ந்து நாம் ஊழியங்களைத் திட்டமிட்டுச் செய்யும்போது, தேவனுக்காக நாமும் பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும். இவ்வாறு நித்தியராஜ்ய கண்ணோட்டத்தோடு ஊழியத்திட்டங்களை நாம் மேற்கொள்வது, நமது ஊழியத்தில் மென்மேலும் சரித்திர சாதனைகளை உருவாக்குமன்றோ!

- JJ. ஹாரிஸ் *(தகவல் தொடர்பு துறை)*

**"நீங்கள் வானுலகை உங்களது குறிக்கோளாக்கினால், அதற்குள்ளே காணப்படும் பூமியையாவது அடையலாம். ஆனால் நீங்கள் பூமியை உங்களது குறிக்கோளாக்கினால், எதையும் அடைய இயலாது." - சி.எஸ். லூயிஸ்**

**"ஒரு மரத்தை வெட்டுவதற்கு ஆறு மணிநேரம் எனக்குக் கொடுக்கப்பட்டால், அதில் முதல் நான்கு மணிநேரத்தை அக்கோடாரியைக் கூர்மையாக்குவதற்குச் செலவிடுவேன்." - ஆபிரகாம் லிங்கன்**

**"தேவன், தங்களால் இயலாததைச் செய்யக்கூடியவர்களைத் தேடுகிறார்; ஆனால், நாமோ நம்மால் செய்யக்கூடிய காரியங்களை மட்டுமே திட்டமிடுவது பரிதாபத்திற்குரியதாகும்." - ஏ. டபிள்யூ. டோஸர்**

**நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. (எரேமியா 29:11)**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஒரு நற்செய்திப் பணி இயக்கம்.

இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்பட்டிராதவர்களுக்கு நற்செய்தியை நேரடியாக எடுத்துச் செல்வதே இதன் பிரதான பணி.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது.

சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**


பொதுச் செயலாளர்:
S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ**

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுகாரியதரிசியிடமிருந்து...


அன்பிற்குரிய பெரியோரே, சகோதர, சகோதரிகளே மற்றும் சிறார்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

புனித அகஸ்டின் கூறுகிறார் – “எந்த ஒரு வேலையையும் செய்வது உங்களைச் சார்ந்தது என நினைத்து அதைச் செய்யுங்கள்; தேவனால்தான் எல்லாமே கூடும் என நினைத்து அவரையே சார்ந்து மன்றாடுங்கள்.” இதன் உள்அர்த்தத்தைத் திட்டமிடலுக்கும் நாம் பயன்படுத்தலாம். நாம் நன்றாகத் திட்டமிடுவதினாலும், திட்டத்தின்படி செயல்படுவதினாலும், ஏதோ நாம் தேவனைச் சார்ந்திராது காணப்படுகிறோமோ என்று தவறாகப் புரிந்துக்கொள்ள தேவையில்லை. நாம் திட்டமிட்டாலும், திட்டத்தின்படி செயல்பட்டாலும், வழிகாட்டுதலுக்காகவும், ஞானத்திற்காகவும் நாம் தேவனையே சார்ந்திருக்கிறோம் என்பதே உண்மை. நம்முடைய எதிர்பார்ப்புகளுக்கும் மேலான நல்லதொரு முடிவைத் தேவனால் மட்டுமே கொடுக்க முடியும். இதைத்தான் புனித பவுல் எபேசியர் 3:20-ல், “நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு'' என்று தேவனைக் குறித்து கூறியிருப்பதைக் காணலாம்.

## திட்டமிடல்:

ஒரு நல்லத்திட்டம் செயல்படுத்துவதற்கு சாத்தியமானதாகவும், கணக்கிடப் படக்கூடியதாகவும், பல பரிமாணங்களைக் கொண்டதாகவும் மற்றும் நிலையான ஆற்றல் கொண்டதாகவும் இருக்க வேண்டும். நமது இயக்கத்தின் தேசிய திட்டமிடல் கூடுகை – 2021, பிப்ரவரி 13 & 14-ம் தேதிகளில் சிறப்பாக நடைபெற சென்னையில் ஒழுங்குச் செய்யப்பட்டிருப்பதைத் தாங்கள் நினைவில் கொண்டு ஜெபிக்க பட்சமாகக் கேட்டுக்கொள்கிறோம்.



நாம் நமது மாதாந்திர பத்திரிக்கையைப் பல மொழிகளில் வெளியிட்டாலும், நமது தமிழ் பத்திரிக்கையான ‘‘அறைகூவல்'' அரசாங்கத்தில் பதிவுச்செய்யப்பட்டு, இம்மட்டும் தபால் சலுகையைப் பெற்றுவந்தது. அரசாங்கப் பதிவீடுகளில் நமது பத்திரிக்கையின் அங்கீகாரம் புதுப்பிக்கப்பட்டு, மீண்டும் தபால் சலுகை கிடைக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## தூரதரிசன நிபுணருக்கு நமது அஞ்சலி:

மிஷனெரி அப்ஹோல்டர்ஸ் டிரஸ்டின் (MUT) ஸ்தாபகரான திரு. ஜே.ஜே. ரத்ன குமார் அவர்கள், கடந்த 2021 ஜனவரி 18-ம் தேதி மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இந்நிறுவனத்தின் மூலமாக இவர் மிஷனெரிகளின் உடல்நலம், நிதித்தேவை, குடும்பநலம், இழப்பு, உறவு சார்ந்த காரியங்கள் மற்றும் மிஷனெரிகளின் நல் வாழ்வுக்கான பல்வேறு நலத்திட்டங்களைக் கருத்தில் கொண்டு, செயல்பட்டு வந்தார். மிஷனெரிகளின் நலன்களில் மிகவும் அக்கறைக்கொண்டு இவர் இவ்வாறு செயல்பட்டு வந்தமை, நீண்ட காலங்கள் நமது மனதில் நீங்காத பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, இவரது மறைவு நமக்கு ஒரு பெரிய இழப்பாகவும் காணப்படுகிறது.

## மிஷனெரி அர்ப்பணிப்பு முகாம்:

முழுநேர மிஷனெரிப்பணிக்கென தங்கள் வாழ்வை அர்ப்பணித்துள்ள

இளைஞர்களுக்காக ஒரு பின்தொடர் முகாம், சுமார் இரண்டரை நாட்களாக மதுரையில் வைத்து மிகவும் சிறப்புடன் நடத்தப்பட்டது. சுமார் 200 பேர் இதில் கலந்துக்கொண்டனர். இம்முகாமில் 61 பேர் கலாச்சாரம் கடந்த மிஷனெரிப்பணிக்கென தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளனர்; அவர்களில் 5 பேர் உடனே நமது ஊழி யத்தில் இணைந்துக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள். மற்றவர்கள் தாங்கள் வாழும் பகுதிகளைச் சுற்றிலுமுள்ள இடங்களில் 61 ஜெபக்குழுக்களை அமைத்து செயல்படுத்தத் தீர்மானித்துள்ளனர். இவர்களை நாம் நமது ஜெபத்தில் தாங்கிக்கொள்வோம்.

கிறிஸ்துவின் பணியில்



S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

# ஓய்வு பெற்ற நமது மிஷனெரிகளுக்காக கர்த்தரைத் துதிக்கிறோம்

## 2020-ம் ஆண்டு மே முதல் டிசம்பர் மாதம் வரை பணிநிறைவுப் பெற்றுள்ள நமது மிஷனெரிகள்

அருட்திரு. அருமைநாயகம் பி.



இணைந்த தேதி : 01.06.1974
ஓய்வு பெற்ற தேதி: 31.05.2020

திருமதி. பிரேமா பீட்டர் ஹரிராம்



இணைந்த தேதி : 15.11.1981
ஓய்வு பெற்ற தேதி: 31.05.2020

திரு. பீட்டர் ஜெபராஜ்



இணைந்த தேதி : 19.05.1981
ஓய்வு பெற்ற தேதி: 31.07.2020

திருமதி. பிரமிளா ஜார்ஜ் எட்வர்ட்



இணைந்த தேதி : 05.10.1983
ஓய்வு பெற்ற தேதி: 30.09.2020

திருமதி. சாராம்மா தாமஸ்



இணைந்த தேதி : 15.12.1978
ஓய்வு பெற்ற தேதி: 30.11.2020

இவர்களுடைய அர்ப்பணிப்புள்ள ஊழியத்திற்காகவும், நமது இயக்கத்தின் மூலமாக இவர்கள் தேவனுக்கு ஆற்றிய நீண்டகால பணிகளுக்காகவும் இவர்களை அதிகம் பாராட்டுகிறோம்; தேவனைத் துதிக்கிறோம். இவர்களுக்கு தேவன் தொடர்ந்து நல்ல சரீர சுகத்தையும், அமைதியான, சந்தோஷமான நல் வாழ்வையும் நல்க தங்களது ஜெபங்களில் இவர்களை தாங்கிக்கொள்ளுமாறு பட்சமுடன் கேட்டுக் கொள்கிறோம்.

# தேவ ஊழியத்தில் திட்டமிடல்



## தேவனும் திட்டமிடலும்

நமது தேவன் திட்டமிட்டுச் செயல்படுத்துவதில் வல்லவர். அவரது பிள்ளைகளாகிய நாமும் ஊழியத்தில் திட்டமிட்டுச் செயல்படுபவர்களாகக் காணப்படவேண்டுமென அவர் விரும்புகிறார். அவரது அநாதி திட்டங்களின் அழகிய பாங்கைச் சிருஷ்டிப்பிலும், வேதாகமத்தை வடிவமைத்ததிலும், மனுக்குல இரட்சிப்பிற்கென அவர் கொண்டிருந்த மீட்பின் திட்டத்தின் வாயிலாகவும் மிகத் தெளிவாக அறியலாம். மேலும், அவர் தமது திட்டங்களை வேதாகம தாசர்களாகிய மோசே, எரேமியா போன்றோருக்கும் தெளிவாகக் காண்பித்து அவர்கள் மூலமாக தமது ஜனங்களுக்கான ஆசீர்வாதங்கள், எதிர்கால நம்பிக்கைகள் யாவையும் தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். (எரே.1:5 & 29:11).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், இவ்வுலகத்தில் மனிதனாக ஊழியம் செய்தக் காலங்களில் திட்டமிட்டுச் செயல்பட்டு வந்ததைக் காணலாம். திட்டமிடல் எவ்வளவு முக்கியமானது என்பதை இயேசுகிறிஸ்து இரு எடுத்துக்காட்டுகளோடு காண்பித்ததை, லூக்கா எழுதின சுவிசேஷத்தில் (14:28-32) மிக அழகாகக் கூறியிருப்பதைக் காணலாம். அதாவது முதலாவதாக, *“உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால், பார்க்கிறவர்களெல்லாரும்: இந்த மனுஷன் கட்டத்தொடங்கி, முடிக்கத் திராணில்லாமற் போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம்பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ?”* என்றும்; இரண்டாவதாக, *“அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக்கொண்டு எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனை பண்ணாமலிருப்பானோ?”* என்றும் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு மேலே கூறப்பட்டுள்ள இரு உவமைகளிலும், திட்டமிடுதலுக்கான யுக்திகளை (Strategic Planning - SP) நாம் காணலாம். அதாவது இதன் அடிப்படையில், ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதற்குமுன், நாம் உட்கார்ந்து சிந்திக்க வேண்டும்; செலவை மதிப்பிட வேண்டும்; தற்போதுள்ள நிதிநிலைமையையும் மனிதவளத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்; அதோடு அத்திட்டத்தை மேற்கொள்வதற்கான நமக்குள்ள தகுதியான அம்சங்களையும் உணர்தல் அவசியமாகும். மேலும் அதைச் சாத்தியமாக்க ஒரு குழுவாக ஆலோசித்து, நாம் மேற்

கொண்டுள்ள திட்டங்களை நிறைவேற்ற பொருத்தமான ஓரிரு வழிவாய்ப்புகளைக் கண்டுபிடித்து, இலக்கை அடைய முயற்சிக்க வேண்டும்.

தேவனின் திட்டவழிமுறைகளை நாம் பின்பற்றும்போது, அவர் நம்மூலமாக மகிமைப்படுகிறார். நாமும் ஆசீர்வதிக்கப்படுகிறோம். நீதிமொழிகள் 29:18-ல் குறிப்பிட்டுள்ளபடி, "தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்" என்கிற வசனத்திற்கும், திட்டமிடலின் யுக்திகளுக்கும் (SP) எந்தவிதத் தொடர்பும் கிடையாது எனச் சில திட்டமிடுபவர்கள் குறிப்பிடலாம். ஆனால் தேவவார்த்தை, திட்டமிடலின் யுக்திகளை அங்கீகரிப்பதையும் தேவன் தமது திட்டங்களைத் தமது பிள்ளைகள் மூலமாகக் கொள்கைகளாகவும், எடுத்துக் காட்டுகளாகவும் வெளிப்படுத்திச் செயல்படுத்தியுள்ளார் என்பதையும் திட்டமிடலின் யுக்திகளைச் செயலாக்கம் செய்த பல வேதாகம கதாபாத்திரங்கள் மூலமாக அறிந்துக் கொள்ளலாம்.

மோசேயின் மாமனாகிய ஜெத்ரோ, இஸ்ரவேல் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் மோசே பல மணி நேரங்கள் செலவிடுவதைக் கண்டு, தேவன் கொடுத்தத் திட்டமிடலின் யுக்திகளை அவருக்குக் கற்றுக்கொடுத்தார். அதாவது, ஜெத்ரோ மோசேயிடம், ''ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தும். அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம் விசாரித்து, பெரிய காரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும்; இப்படி அவர்கள் உம்மோடே கூட இந்தப் பாரத்தைச் சுமந்தால், உமக்கு இலகுவாயிருக்கும்'' (யாத்:18:21-22) என்றார். இந்தத் திட்டங்களினால் புதிய தலைமைத்துவங்களைக் கண்டுபிடித்து, காரியங்களைத் திறம்பட நிறைவேற்ற முடிந்தது என்பதை அறியலாம்.

எண்ணாகமம் 13-ல், கானானைச் சுதந்தரிப்பதற்கான ஒரு திட்ட யுக்திகளைத் தேவன் மோசேக்குக் கொடுத்தார். 2-ம் வசனத்தில், ''நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு" என்று தற்போது கானான் தேசத்திலுள்ள நிலைமையை அறிவதற்கும், 3-ம் மற்றும் 17-ம் வசனங்களில், அத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான இடம், செல்ல வேண்டிய பாதைகள் மற்றும் அடைய வேண்டிய இலக்குகள் குறித்துத் தெளிவான செயல் திட்டங்களை வகுத்துக் கொடுக்கிறார். வசனங்கள் 5-15-ல் ஒரு குழுவை உருவாக்க, அனைத்து இஸ்ரவேல் புத்திரர்களிடமிருந்தும் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துப் பலரை இணைத்துக்கொள்ளுமாறுக் கூறுகிறார். வசனம் 18-ல் நிலம், மக்கள் மற்றும் அவர்கள் எவ்வளவு பாதுகாப்புடன் காணப்படுகிறார்கள் என்பதை அறியக் கூறியிருப்பது, அடைய வேண்டிய இலக்கு பற்றிய முழுமையான ஆய்வு செய்வதைக் குறிப்பிடுவதாக அமைகிறது. வசனம் 20-ல் மண்ணின் வளத்தை ஆய்வு செய்து, விளைபொருட்களின் மாதிரிகளைக் கொண்டுவரக் கூறியிருப்பது,

அந்த ஆய்வில் நல்தெளிவுக்கு நேராக நம்மை வழிநடத்துகிறது.

ஆம், நவீன மதசார்பற்ற சூழலில் பயன்படுத்தப்பட்டு வரும் "திட்டமிடலின் யுக்திகளின்'' சில முக்கியமான அம்சங்களைத் தேவன் மோசே மூலம் நமக்குக் கற்றுக்கொடுத்திருப்பதைக் காணலாம். இந்த திட்ட யுக்திகள்தான் பல விதங்களில் நமது மிஷனெரிப்பணியில் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டமிடலின் யுக்திகளை நாம் கடைபிடிக்க வேண்டுமென நீதிமொழிகளின் புத்தகம் நமக்குப் பல பயனுள்ள ஆலோசனைகளை வழங்குகிறது. இதற்கு ஆதாரமாக, நீதிமொழிகளின் புத்தகத்திலிருந்து இரு வசனங்களைக் குறிப்பிடலாம். தேவனுடன் இணைந்துத் திட்டமிடவேண்டும் – ஏனெனில், "கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை'' (நீதி.21:30). "மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்" (நீதி.19:21).

கிறிஸ்தவ விசுவாசிகளாகிய நாம், திட்டமிடலின்போது தேவனின் ஞானத்தைச் சார்ந்திருத்தல் மிகவும் அவசியம். அவரை நமது திட்டங்களின் முக்கியப் பங்காளியாக்கி, தேவவார்த்தைகளைப் படித்து, அவருடைய ஆலோசனைகளைப் பெற வேண்டும். ஜெபத்தின் மூலம் தேவனின் வெளிப்பாட்டை அறிந்துக்கொள்ளுதல் வேண்டும். பின்பு நாம் திட்டமிடுகிற அனைத்தையும் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், நாம் திட்டமிட்டு எழுதிவைத்த தீர்மானங்களுக்கு மாறாக சில வேளைகளில் தேவன் வழிநடத்தும்போது, நாமும் அதை மாற்றிக்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். ஏனெனில், "உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்'' (நீதி.16:3) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதல்லவா!

## மற்றவர்களோடு கூட்டாகத் திட்டமிடல்

நீதிமொழிகள் 15:22, "ஆலோசனையில்லாமையால் எண்ணங்கள் சித்தியாமற்போம்; ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்." நீதிமொழிகள் 20:18, "ஆலோசனையினால் எண்ணங்கள் ஸ்திரப்படும்; நல்யோசனை செய்து யுத்தம்பண்ணு." ஆலோசனைகளைத் திரட்டுவதில் குழுவாக மூளைக்கு வேலை கொடுத்து, ஒரு தீர்மானத்தை எட்டுவது நல்லதொரு முறையாகும். நமது திட்டக்குழுவினரிடம் தங்களது சிறிய, பெரிய, வேடிக்கையான, ஞானமான ஆலோசனைகளை எழுதக்கேட்டுப் பெற்றுக்கொள்ளும்போது, அவைகளில் சிலசமயங்களில் சிறந்த ஆலோசனைகள் கிடைக்கப் பெறலாம். இந்த யோசனைகளைப் பெற குழுவாகக் கலந்தாலோசிப்பது நல்லது; ஆனால், ஒருவர் மிகச்சிறந்த ஆலோசனையைத் தரும்போது, அவர் பெருமையடைவதும், மற்றவர்கள் அவர்மேல் பொறாமைக்கொள்வதும் அந்த நல்லாலோசனைகளை நிறைவேற்றுவதற்குப் பெரிய தடையாக சில நேரங்களில் அமையலாம்.

திட்டக்குழுவிலுள்ள பிற தலைவர்கள் மற்றும் அங்கத்தினர்களுக்குத் தங்களது குழுத் தலைவரிடம் எல்லாப் பதில்களும் உள்ளது என்கிற எண்ணம் காணப்படலாம்; அக்குழுத் தலைவர்கள் 'என்ன செய்ய வேண்டும்' என்று பிறரிடம் கேட்பதைவிட, அவர்களே மற்றவர்கள் என்ன செய்யவேண்டும் எனச் சொல்ல வேண்டுமென குழுவினர்

எதிர்பார்க்கலாம். இச்சூழ்நிலையில் முன்னணித்தலைவர்கள் மிகவும் தாழ்மையுடன் காணப்பட வேண்டும். சில நேரங்களில், அவர்கள் அவசர மாகத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, அவர்கள் பலருடன் இணைந்து ஆலோசனை செய்வதைத் தவிர்க்கக் கூடாது. "ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத்துக்கும், பதறுகிற வனுடைய நினைவுகள் தரித்திரத்துக்கும் ஏதுவாகும்" (நீதி.21:5). அவசர ஆலோசனைகளைச் செய்வதற்கு, குழுவாகக் கூடி, குறைந்தபட்ச நேரமாவது ஆலோசித்தல் மிகவும் அவசியமாகும். சுயாதீன திட்டமிடல் யுக்தியை வேதாகமம் எச்சரிப்பதைக் காணலாம். ஆவிக்குரிய சிறந்த ஊழியர்கள், மற்றவர்களோடு இணைந்து ஆலோசனை செய்தால் சிறப்பான திட்டங்களை உருவாக்க முடியும்.

திட்டமிடல் யுக்திக்கென ஒப்புக்கொள்ளப் பட்ட எந்தவொரு முழுமையான நெறிமுறை களும் கிடையாது. நமது இயக்கங்களில் பொதுவாகப் பின்பற்றும் நல்ல வழிமுறை களையே நாம் எடுத்துக்கொள்ளலாம். திட்டயுக்திகள் என்பது நாம் இலக்கை அடைய உதவும் காரியங்கள் மற்றும் வழிமுறைகள். திட்டமிடல் என்பது நாம் விரும்பிய ஒரு இலக்கையடைய, நாம் முதலில் செய்ய வேண்டிய ஆலோ சனைக்கான செயல்முறைகளேயாகும். இது, திட்டத்தைத் தயார் செய்வதையும் அவைகளைப் பராமரிப்பதையும் உள்ளடக்கும்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவைப் பொறுத்தவரை, இயேசுவைப் பற்றி வாழ்வில் ஒருமுறையேனும் கேள்விப்பட்டி ராதவர்களுக்கு நற்செய்தியை வழங்கு வதும், அவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதற்கு வாய்ப்பளிப்பதுமே இதன் பிரதானமான நோக்கமாகும். இது ஒரு மகத்தான பணியாக இருப்பதால், கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரும் இந்த நோக்கத்தை ஏற்றுக்கொண்டு, அதை நடைமுறைபடுத்துவதின் மூலம், நாம் அப்பணியைச் சிறப்பாக நிறைவேற்ற முடியும். நாம் கிறிஸ்தவ வெகுஜனங்களிடம் இந்த பொறுப்புணர்வைக் கொண்டு செயல்படுவதற்காகத் தலைவர்களையும், உக்கிராணக்காரர்களையும் அவர்களில் உருவாக்க தேவன் நம்மை அழைத் துள்ளார்; அதற்கென்று அவர்களை இணங்க வைத்தல் மிகவும் அவசியமாகும். புனித பவுல் அறிவுறுத்துவதைப்போல, கிறிஸ்தவ வெகுஜனங்களை இம்மகத்தான பணியில் இன்னும் "அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு" (1தெச.4;1) அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.

இது நமக்கு இருவிதமான பொறுப்புகளை அளிக்கிறது. அதாவது,

1. கிறிஸ்தவ வெகுஜனங்களை நாம் சாட்சியுள்ள ஜீவியம் செய்வதற்கும், சுவிசேஷத்தைக் கிரமமாகப் பிறரிடம் பகர்ந்துக்கொள்வதற்கும் தயார்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. மேலும் அணித்திரட்டல் ஊழியத்தின் மூலமாக, கிறிஸ்தவர்களை மிஷனெரிப்பணிக்கென ஜெபிக்கவும், ஈடுபாடுக் காட்டவும், கொடுக் கவும் உருவாக்கும் பணியைச் செய்ய வேண்டும்.

2. இவ்வாறு ஆயத்தம் செய்தப்பின்பு, அவர்களை அருகிலுள்ள பகுதிகளுக்குச் சென்று சுவிசேஷத்தைப் பகர்ந்துக்கொள்ள ஊக்குவிக்க வேண்டும். வெளிஊழிய அமைப்பு இதைக் கிரமமாகச் செய்ய வேண்டும். இதற்கென நமது நேரம், தாலந்துகள் மற்றும் வருமானங்களைச்

செலவுசெய்யக்கூடிய உக்கிராணத்துவம் கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டும். அதனால்தான் நமது இயக்கத்தில் இருவிதமான ஊழியங்களாகிய செல்லுவோர், அனுப்புவோர் அமைப்புகள் காணப்படுகிறது.

பெரும்பாலும், மிஷன் தலைவர்கள் தங்கள் மனதில் ஒரு பெரிய திட்டம் இருப்பதாகக் கூறுகிறார்கள்; ஆனால் அது எழுதப்படவில்லையெனில், சக ஊழியர்களிடையே ஒருமித்த கருத்தை உருவாக்குவதும், வெளிப்படையான மாற்றங்களை உருவாக்குவதும், அவர்களை நம்மோடு செயல்பட வைப்பதும் மிகவும் கடினமானதாகிவிடும். ஆபகூக் தீர்க்கதரிசி (2:2-3) குறிப்பிட்டிருப்பதுபோல, "நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை. குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை." ஆம், இங்கு தேவன் தமது தீர்க்கதரிசியை ஒரு காவலாளியாக நியமித்து, தரிசனங்களை ஒரு கல்லில் எழுதுமாறுக் கட்டளையிடுகிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்தின் ஆட்சியாளர்களும், நிர்வாகிகளும் தங்கள் திட்டங்களை எழுத்துப்பூர்வமாக எழுதி வைக்கவில்லை. அவர்களது தரிசனங்கள் வெளிப்படையற்றதாகவும், மற்றவர்கள் அதைத் தெளிவாக எளிதில் அறிந்துக்கொள்ள முடியாததாகவும் காணப்பட்டமையால், அத்தரிசனங்கள் பெருமளவில் மக்களைச் சென்று எட்டாமலும், அதனால் அநேகருடைய ஈடுபாட்டைப் பெற்றுக்கொள்ள முடியாமலும் ஆகிவிட்டதைக் காணலாம்.

நீதி.20:5 - "மனுஷனுடைய இருதயத்திலுள்ள யோசனை ஆழமான தண்ணீர் போலிருக்கிறது; புத்திமானோ அதை மொண்டெடுப்பான்." மேலும், இக்கட்டுரையின் முற்பகுதிகளில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள அநேக வேத வசனங்களைக் கொண்டு, நீதிமொழிகளின் புத்தகத்தில் 'திட்டமிடல்' குறித்து சொல்லப்பட்ட ஆலோசனைகளின் அளவைப் பார்த்தால், அது நமக்கு மிகவும் வியப்பாகக் காணப்படுகிறது.

## திட்ட யுக்திகளின் ஏழு கோட்பாடுகள்

- நோக்கத்தில் தெளிவாக இருக்க வேண்டும்.
- நமது தற்போதைய நிலையைத் துல்லியமாக அறிந்திருக்க வேண்டும்.
- பகரப்பட்ட மற்றும் எழுதப்பட்ட தரிசனங்களை உருவடையச் செய்ய வேண்டும்.
- வெற்றிக்கான நமது முக்கிய காரணிகளையும், தடைகளையும் அடையாளம் காண வேண்டும்.
- நம்முடன் பணியாற்றும் நிர்வாகிகளைக் குறித்த அறிவு கொண்டிருத்தல் வேண்டும்.
- அவ்வப்போது மேற்பார்வை செய்ய வேண்டும்.
- பொறுப்பைப் பெருக்கிக்கொள்வதற்கு ஏற்ற ஊக்கத்தையும், கண்டிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

நிறைவாக, 'இயேசுவின் திட்டமிடல் தன்மை'க்கு ஒரு சிறப்பான எடுத்துக் காட்டைக் காணலாம். அப்போஸ்தலர் 1:4-8ல் இயேசு, தமது சுவிசேஷத்தை உலகம் முழுவதும் கொண்டுச் செல்வதை

இலக்காகக் கொண்டு, அதைச் சீராக செயல்முறைப்படுத்த ஒரு முக்கியத் திட்டத்தை முன்வைக்கிறார்.

வசனம் 5-ல் எருசலேமை விட்டு அவசரப்பட்டு வெளியேற வேண்டாம்; அதாவது, உட்கார்ந்து, காத்திருந்துத் திட்டமிடல் அவசியமாகும் என்பதை இதில் வலியுறுத்துகிறார்.

வசனம் 7-ல் அது நடைபெறும் நேரங்களையும், காலங்களையும் குறித்து அறிய தேவையில்லை; அதாவது, அத்தியாவசியமற்ற முக்கியமற்ற காரியங்களால் நாம் திசைதிருப்பப்படாதிருத்தல் அவசியம்.

வசனம் 5&8-ல் பரிசுத்த ஆவியானவர் உங்களில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள்; அதாவது, இலக்கை வெற்றிகரமாக அடைவதற்குத் தேவையான பொருளாதாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் அவசியம்.

நீங்களே எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்; அதாவது, கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ்தல் அவசியம்.

எருசலேமிலும் – அதாவது, நாம் வாழுகிற இடத்திலும் கிறிஸ்துவின் சாட்சிகளாயிருத்தல்.

யூதேயாவிலும் – அதாவது, நமக்கு அருகாமையிலுள்ள இடங்களிலும் சாட்சிகளாயிருத்தல்.

சமாரியாவிலும் – அதாவது, தொலைதூர, எட்டப்படாத மற்றும் வெறுக்கப்படும் பிரதேசங்களிலும் சாட்சிகளாயிருத்தல்.

பூமியின் கடைசிபரியந்தமும் – அதாவது, உலகின் கடைமனிதனுக்குச் சுவிசேஷம் சென்றடையும்வரை நாம் கிறிஸ்துவின் சாட்சிகளாகச் செயல்படுதல் மிகவும் அவசியமாகும்.

ஆம்! மத்தேயு 28:19-ல் இயேசு, "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி," எனத் தமது பிரதான கட்டளையில் அவர் குறிப்பிட்டிருப்பது, ஒரு வெறுமையான கூற்றாகக் காணப்படக்கூடாது என்பதில் அவர் தெளிவான, படிபடியான விளக்கத்தை மிக நேர்த்தியாக அளித்துள்ளதைக் காணலாம். அப்.1:11-ல், ''இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" – என்கிற இவ்வார்த்தை நாம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதற்குப் பெரும் ஊக்கத்தை அளிப்பதாக அமைந்துள்ளது. நாமனைவரும் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும், சகஊழியர்களுமாகக் காணப்படுகிறோம். எனவே, இவ்வாறு நமக்கு இயேசுவால் அருளப்பட்ட திட்டமிடுதலுக்கான யுக்திகள் வேதாகமத்தில் காணப்படும்போது, திட்டமிடல் வேதத்தின் அடிப்படையைச் சார்ந்ததா இல்லையா எனச் சந்தேகப்படுதல் அவசியமற்றதன்றோ!

*– (இந்தக் கட்டுரையை எழுதியுள்ள நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முன்னாள் இணைப்பொதுசெயலாளர்– சகோ. பி. ஹேமச்சந்திரன் அவர்கள், முதன்முதலாக நமது இயக்கத்தில் திட்டக்கூடுகையை அறிமுகம் செய்து, அதை வருடந்தோறும் நடத்துவதற்கு முக்கிய காரணமாகத் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.)*

# திட்டமிடுதலும்; அதன் வெற்றியும்



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வலிமை – 'திட்டமிடுதல்.' பிப்ரவரி மாதம் வந்துவிட்டாலே, நமது மிஷனெரிகளும், தன்னார்வத் தலைவர்களும் பங்குப்பெற்று, நமது ஊழியத்தின் அனைத்து பகுதி களையும் துல்லியமாகத் திட்டமிடும் "தேசிய திட்டக்கூடுகை" நடக்கும். "businessjargons.com" என்ற இணையதளத்தில் காணும் பொருத்தமான விளக்கத்தின்படி, " 'திட்ட மிடுதல்' என்பது ஒரு இயக்கத்தின் நோக்கங்களை முன் வைத்து, அவைகளை அடைவதற்கான பல்வேறு செயல்பாடுகளை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு அறிவு சார்ந்த செயல்முறையாகும். அது ஒரு குறிப்பிட்ட இலக்கை எவ்வாறு எட்டுவது என்பதைத் தெளிவாக வரையறுக்கிறது," என அறிந்துக்கொள்ளலாம். இந்தச் சிறிய கட்டுரையில், திட்டமிடுதலின் பல்வேறு அம்சங்களைக் குறித்து விவரிக்க நான் முயற்சிக்கவில்லை. ஆனால் யாரேனும் திட்டமிடுதலைக் குறித்து கூடுதலாக அறிந்துக்கொள்ள விரும்பினால், "அருட் பணியில் திருச்சபை பங்கேற்க தலைவர் களைத் தகுதிப்படுத்துதல்" என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் கிடைக்கும் நமது புத்த கத்தில் மேலாண்மை நிபுணரான திரு. ஆர். ஜெயக்குமார் அவர்கள் எழுதியுள்ள சிறப்பானப் பாடத்தை வாசித்துப்பார்த்து தெரிந்துக்கொள்ளலாம். இப்போது இக் கட்டுரையில், நாம் நமது திட்டமிடுதலின் மூலம் கிடைக்கும் வெற்றியால் திருப்தி யடைந்திருக்கிறோமா? நாம் எதிர்பார்க்கும் விளைவுகளை அடைந்திருக்கிறோமா? என்ற முக்கியமான கேள்விக்கணைகளைக் குறித்து மாத்திரம் சற்று ஆழமாகச் சிந்திப்போம்.

## வெற்றிக்கு நடத்தும் காரணிகள்

**1. நமது திட்டங்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தரிசனத்துடன் இணைந்திருக்க வேண்டும்:**

பெருநிறுவன உலகத்தில், ஒரு நிறுவனம் தன்னுடைய வலிமையையும் தன் சூழலையும் பார்த்து, கூடுதல் பொருளாதார ஆதாயம் தரும் ஒரு புதிய திட்டத்தைத் துவங்கும். சூழ்நிலைகள் அனுமதிக்கும் எதையும் செய்யக்கூடிய சுதந்திரம், ஒரு கிறிஸ்தவ ஊழியத்திற்குக் கிடையாது. மாறாக, அது தனக்கு ஒதுக்கப்பட்ட ஊழியத் திலேயே பணி செய்ய வேண்டும். எனவே அதற்கேற்றபடியே, அது தன்னுடைய நீண்ட கால, குறுகிய காலத் திட்டங்களை வகுக்கவேண்டும். 20-ம் நூற்றாண்டின் 60-ம் ஆண்டுகளில் வெளிநாட்டு மிஷனெரிகள் நம் தாய்நாட்டை விட்டுக் கட்டாயமாக வெளியேற்றப்பட்டபோது, நம்

தாய்நாட்டின் சந்திக்கப்படாத பகுதிகளை 'வாழ்வை மாற்றும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தினால்' சந்திக்கவேண்டும் என்று, நமது துவக்க காலத் தலைவர்களைத் தேவன் பாரப்படுத்தினார். இந்த தரிசனத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து வளங்களையும் உள்ளூர் சபைகளைப் புத்துயிரூட்டுவதன் மூலம் ஈட்டவேண்டும் என்றத் தெளிவையும் அவர் தந்தார். இந்தத் தரிசனம் மிகத்தெளிவாக இருப்பதால், நமது முன்னோர்களுக்குத் தேவன் கொடுத்த ஆதிதரிசனத்திற்கு நாம் உண்மையாக இருக்க வேண்டும். மேலும், நம்முடைய திட்டங்கள் இந்த தரிசனத்தோடு முழுமையாகப் பொருந்துவதாகவும் இருக்க வேண்டும். சந்திக்கப்படாதோர் நமது தாய்நாட்டின் தொலைதூர இடங்களிலும் நமக்குச் சமீபத்திலும் காணப்படுகிறார்கள். ஆகவேதான் கடந்த ஆண்டு, "செயல்படு 2020" என்றத் திட்டத்தை நாம் அறிமுகப் படுத்தியபோது, சபைகளிலும் சபை களுக்கு வெளியிலும் உள்ள நமக்கு அருகாமையிலுள்ளவர்களையும் மற்றும் பணித்தளங்களிலுள்ளவர்களையும் சந்திக்க நாம் திட்டமிட்டோம். இலக்காகக் குறிக்கப்பட்ட சில எண்களை எட்டுவதை மட்டுமே, 'வெற்றி' என்று அழைக்காமல் இருக்க நாம் கவனமாயிருக்க வேண்டும். "சீடர்கள்" என்று நம்மால் அழைக்கப் படுபவர்கள் மறுரூபமாக்கப்பட்ட வாழ்வை வெளிப்படுத்தி, நமது ஊழியத்தில் தீவிரமாகப் பங்கேற்றால் மட்டுமே நமது திட்டங்கள் வெற்றிப்பெற்றுள்ளன என்றும், நாம் சந்திக்கப்படாதவர்களைச் சந்தித்துவருகிறோம் என்றும் கூற முடியும். நம்முடைய அனைத்து திட்டங் களும் 'சந்திக்கப்படாதவர்கள் சந்திக்கப் படவேண்டும்' என்ற ஒரே நோக்கத்தை மையப்படுத்துகிறதா என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

**2. நமது திட்டங்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அனைத்து அடுக்கு களையும் சென்றடைய வேண்டும்:**

கர்த்தரின் கிருபையினால் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தனது செயல்பாடுகளில் அனைத்து தரப்பு மக்களையும் இணைத்தி ருக்கிறது. தேசத்தின் ஒரு மூலையிலிருந்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்காக உண்மையாய் ஜெபிக்கும் ஒரு ஜெபக் குழுவின் அங்கத்தினர், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஒரு பிரிவின் தலைவருக்கோ அல்லது இயக்கத்தின் பொதுக்காரியதரிசிக்கோ இணையாக முக்கியமானவரே. அனைவரும் நமது திட்டங்களின் நோக்கங்களை அறிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் திட்டங்கள் சரியாகச் செயல்படுத்தப்படும். திட்டங் களை மிகச் சிறந்த முறையில் அமைத்தும், அவைகளைச் செயல்படுத்துவதில் குறை யிருக்குமானால், யார் பயன் பெற இயலும்? நமது திட்டங்கள் பயன்தர வேண்டுமானால், முழுநேரப் பணியாளர்களானாலும் சரி, அதிகநேரப் பணியாளர்களானாலும் சரி, நமது அனைத்து அங்கத்தினர்களுக்கும் அனைத்து செயல்பாடுகளிலும் தாங்களும் இணைக்கப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வு இருக்க வேண்டும். இது நடக்க வேண்டு மானால், நடைமுறையிலுள்ள "மதிப்பாய்வு மற்றும் கட்டுப்பாடு" முறைகளின் செயல்பாடுகளைச் சீரமைக்கவேண்டும். உதாரணமாக, பணித்தளப்பிரிவில் ஒரு பிராந்தியத்திலுள்ள அனைத்து மிஷனெரிகளும் அங்கம் வகிக்கும் "பிராந்திய திட்டக்கூடுகை" (Regional Planning Meeting - RPM) என்றச் சிறந்த அமைப்பு உள்ளது. அந்த அமைப்பின் கூடுகைகளில் அந்தப் பிராந்தியத்தின் ஊழியத்திற்கான அனைத்து அம்சங்களும் விரிவாக விவாதிக்கப்பட்டு, பின்பு அதற் கான செயல்முறைகள் திட்டமிடப்படும்.

எனவே தேசிய திட்டக்கூடுகையில் விவாதித்தத் திட்டங்களை இந்தப் பிராந்திய திட்டக்கூடுகைகளில் முழுமையாக ஆராய்ந்து, அனைத்து பிராந்தியங்களிலும் தேசிய திட்டக்கூடுகையில் நியமித்த இலக்குகளை எட்டுவதற்கான நுண்ணியத் திட்டமிடுதலும் நடைபெற வேண்டும். மேலும் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து நாம் குறிப்பிட்டக் காலஇடைவெளியில் ஆய்வு செய்து, வேண்டிய திருத்தங்களைச் செய்து முன்னேற வேண்டியதும் அவசியம். பிற பிரிவுகளிலும், தன்னார்வத் தலைவர்கள் மத்தியிலும் இப்படிப்பட்ட அமைப்புகள் நமக்கு இருக்க வேண்டும்.

### 3. வெற்றியான செயல்படுத்தலுக்குக் கவர்ந்திழுக்கும் தலைவர்கள் தேவை:

தேவன் ஒரு குழுவின் மூலமாகவோ, அல்லது சமூகத்தின் மூலமாகவோ செயல் படாமல், தனி மனிதர்கள் மூலமாகவே தம் பணிகளைச் செய்கிறார் என்பது இரகசியம் கிடையாது. எனவே நமது திட்டங்கள் வெற்றிப்பெற வேண்டுமானால், அத்திட்டங்களைச் சார்ந்திருக்க பிறரை வழிநடத்தும் ஒரு வலிமையான மத்திய தலைவர் நமக்குத் தேவை. இடையூறு களும், தாமதங்களும் தேவப்பணியில் இயற்கையானது. காரணம், நமது முயற்சிகள் சாத்தானாலும் அவனது தீய ஆவிகளாலும் எதிர்க்கப்படும். உலகமும் நமக்கு எதிராயிருக்கும். இந்தச் சூழ்நிலை யில் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு எதிர்நடவடிக்கையைத் திட்டமிடவும், நிய மித்திருக்கும் ஆதிதரிசன நோக்கங்களுக்கு நேராக நம்மைத் தொடர்ந்து நடத்திச் செல்லவும் நெகேமியா போன்ற ஒரு தலைவன் தேவை (நெகே.4:16). அதே நேரத்தில் ஒரே மனிதரால் எல்லா வற்றையும் செய்ய இயலாது. எனவே, இந்த மத்திய தலைவருக்குத் தங்கள் ஊழிய எல்லைகளில் திட்டங்களைச் செயல்படுத்தும் திறமை வாய்ந்த மற்றும் ஆவியில் நிறைந்த பலத் தலைவர்களின் ஆதரவும் இருக்க வேண்டும். இவர்கள் பிறப்பிலேயே தலைவர்களாகப் பிறப்ப தில்லை. ஆனால் ஒரு கால கட்டத்திற் குள்ளாக இவர்கள் நற்தலைவர்களாக உருவாக்கப்படவேண்டும். ஆகவே, மேலே குறிப்பிடப்பட்ட அமைப்புகள் யாவும் அத்தகைய கவர்ந்திழுக்கும் தலைவர் களைக் கண்டுபிடிப்பதற்கு ஏற்ற சிறந்த இடங்களாகும். மேலும் நமது முக்கிய மதிப்பீடுகளை இந்த அமைப்புகளில் சிறந்த முறையில் உட்புகுத்துவதின் மூலமும், திரும்பத்திரும்ப அவைகளை வலியுறுத்துவதின் மூலமும் தொடர்ந்து தரமானத் தலைவர்களை உருவாக்க இயலும்.

### 4. நமது திட்டங்களில் நமது தரிசனத் திற்கு சம்பந்தமில்லாத செயல்களைச் சுருக்க வேண்டும்:

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணம் இதை நாம் நன்குப் புரிந்துக்கொள்ள உதவும். மனிதன் பாவத்தில் விழுந்த நாளில் வெளிப்படுத்தப்பட்ட தேவ திட்டத்தை நோக்கமாகக் கொண்டு இயேசுகிறிஸ்து தமது ஊழியத்தைத் திட்டமிட்டு, காணாமல் போனவர்களைத் தேடுவதையும் இரட்சிப்பதையுமே தமது ஊழியத்தின் நோக்கமாக அமைத்தார் (லூக்.19:10). இதை நிறைவேற்ற, ஏசாயா பல நூற்றாண்டுகளுக்கு முன் உரைத்தது போல, இயேசு கலிலேயா முழுவதையும் சுவிசேஷ மயமாக்கத் தெரிவு செய்தார் (ஏசா.9:1-2). அத்துடன் அவர் சென்றபின் அவருடைய பணியைப் புது எல்லைகளுக்கு விரிவாக்கும் தலைவர்களை உருவாக்கவும் திட்டமிட்டார். “மனந்திரும்புங்கள், பரலோக

ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று அவர் பிரசங்கிக்கத் துவங்கியபோது, பலவிதமான வியாதிகளினாலும், பிசாசின் பிடியினாலும் பாதிக்கப்பட்ட மக்களை விடுவிக்கும் தேவையை எதிர்கொண்டார். அவரை அணுகிய அனைவருக்கும் அவர் சுகம் கொடுத்தாலும், தம்முடைய பணியின் முக்கிய மதிப்பீடுகளைக் கற்றுக்கொடுப் பதற்கு அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தினார் (மத்.8:3-4,10-12). அதே நேரத்தில் தம் சீடர்களிடம், "அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம்பண்ண வேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டு வந்தேன் (மாற்கு 1:38)," என்று சொல்லி, சுகமளிக்க தேவையுள்ள இடங்களிலிருந்து தம்மைத் துரிதமாக விடுவித்துக் கொண்டார். அதுபோல, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவும் மனந்திரும்பு தலின் செய்தியைப் பிரசங்கிப்பதற் காகத்தான் அழைக்கப்பட்டிருக்கிறது. ஆலயங்கள் கட்டுவதும், ஏழைப்பிள்ளை களை வளர்ப்பதும், மருத்துவ வசதிகளை உருவாக்குவதும் இதன் அழைப்பு அல்ல. ஆகையால் இச்செயல்கள் நமது ஆற்றல் மற்றும் வளங்களைக் குறைப்பதோடல் லாமல், சந்திக்கப்படாதவர்களைச் சந்திக்கும் நமது தரிசனத்திலிருந்து நம்மைச் சற்று திசைமாறச் செய்கின்றன. எனவே, இயேசு செய்தது போல, இப்படிப்பட்ட செயல்களுக்குத் துரிதமாகக் கட்டுப்படுத்தும் எல்லைகளை அமைக்க நாம் திட்டமிட வேண்டும். மேலும், "முதலாவது தேவனு டைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்,'' என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை நமது விசுவாசிகள் நிறைவாக அனுபவிக்க நாம் அனுமதிக்க வேண்டும் (மத்.6:33).

என்னுடைய பணித்தள அனுபவத்தின் முதல்கிறிஸ்துமஸ் நாட்களில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லி முடிக்கிறேன். நானும் இரண்டு மூத்த ஊழியர்களும், ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள தும்கா நகரில் அருட்தந்தை கிறிஸ்துதாஸ் என்ற ஒரு புகழ்வாய்ந்த ஜெசுயிட் பாதிரியாரைப் பார்க்கச் சென்றிருந்தோம். அச்சமயம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மால்தோ ஊழியத்தில் இரண்டு பத்தாண்டுகளைக் கடந்திருந்தது. அந்நாளில் அந்தப் பாதிரியார் சொன்ன வார்த்தைகள் இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றன. அவர் சொன்னார், "நாங்கள் கல்வியின்மை மற்றும் ஏழ்மையை அகற்றும் திட்டங்கள் மூலமாக மால்தோ மக்களின் துயர் துடைக்க முயற்சித்தும், கிட்டத்தட்ட முழுமையாகத் தோல்வியுற்றுள்ளோம். ஆனால் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவோ, கிறிஸ்துவை முதலாவது மால்தோ மக்களுக்குக் கொடுத்ததன் மூலம் நாங்கள் கண்ட எங்கள் கனவை நனவாக்கியிருக்கிறது." கிறிஸ்துவின் திராட்சத்தோட்டத்தில் இணைந்துப் பணிபுரியும் ஒரு ஊழியரின் உண்மை சாட்சி இது.

ஆகையால், "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தா யென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதி யில் செய்த கிரியைகளைச் செய்வாயாக," (வெளி. 2:4-5) என்ற தேவவார்த்தையை நாம் தீவிரமாக ஒருமித்துச் சிந்தித்து, நம்மைச் சீர்படுத்தி, செயல்படுவோமாக!

- சகோ. இஸ்ரேல் நத்தானியேல் எட்வர்ட்,
FMPB - கணினித்துறை செயலர்,
தலைமைச் செயலகம்.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திரு. A. S. ஆல்பர்ட் தீனதயாளன் அண்ணன் அவர்கள், தேவனுடைய கிருபையால் ஈரோடு மாவட்டம், அந்தியூரில் ஆசிரியர் பணியைச் செய்து வந்தார்கள். அவ்வாறு தான் வேலை பார்க்கும் நாட்களில், நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தில் அதிக ஈடுபாடுக் கொண்டார்கள். 1995-ம் ஆண்டு வரை அந்தியூர் பகுதியின் ஜெபக்குழுத்தலைவராகச் செயல்பட்டு வந்தார்கள். அநேக சபைகளிலும் சென்று ஊழியம் செய்து வந்தார்கள். வயதுமூப்பின் காரணமாக 01.09.2020 அன்று அதிகாலை, இவர்கள் இவ்வுலக ஓட்டத்தை நிறைவு செய்துவிட்டுத் தேவனுடைய ராஜ்யம் சென்றடைந்தார்கள். இவர்கள் விட்டுச் சென்றுள்ள மகன், மருமகள், பேரப்பிள்ளைகளுக்காக ஜெபித்துக்கொள்வோம்.

- பிராந்திய விரிவுப்பணி செயலர், தூத்துக்குடி- வடக்கு.

---



செல்வி. சாந்தி எபினேசர் ஆசிரியை அவர்கள், ஈரோடு பெரியார் நகரில் கர்த்தருக்கு மகிமையாக வாழ்ந்துக் கடந்த 20.12.2020 அன்று, தனது 86-வது வயதில் தேவராஜ்ய மகிமைக்குள் சேர்ந்தார்கள். கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு தனது வாழ்நாளையும், செல்வத்தையும் செலவு செய்தவர்கள் இவர்கள். தனக்கென்று எதுவும் வைத்துக்கொள்ளாமல் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு, தான் போட்டிருந்த தங்க கம்மலையும் FMPB ஊழியத்திற்குக் கொடுத்து, இறுதி மாதம் வங்கியில் ரூ.4000/- மட்டுமே வைத்துச் சென்று முன்மாதிரியாக வாழ்ந்தவர்கள். ஈரோடு, C.S.I கோட்டை ஆரம்பப்பள்ளியில் ஆசிரியையாகப் பணி செய்து, வாழ்நாள் முழுவதும் அநேகருக்குத் தாராளமாக உதவிச்செய்து, உணவு சமைத்துக் கொடுத்து, கரிசனையோடு பராமரித்து வாழ்ந்தவர்கள். தவறாமல் மாநில முகாமில் கலந்துக்கொண்டு, தொடர்ந்து பாரத்தோடு ஜெபித்து, பலமுறை ராஜஸ்தான் மாநிலத்திற்கு பணித்தள விஜயம் சென்று வந்தவர்கள். மிகவும் உற்சாகமாக மாதந்தோறும் அநேக குடும்பங்களைச் சந்தித்து, ஜெபித்து, இறுதி நாள் வரை காணிக்கை சேகரித்து, ஊழியத்தை நிறைவேற்றினார்கள். அருமை யான இத்தாயாரை இழந்துத் தவிக்கும் அவரது குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.

- விரிவுப்பணி செயலர், ஈரோடு பிராந்தியம்.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



நமது முன்னாள் மிஷனெரி அருள்திரு. ஸ்டேன்லி சார்ல்ஸ் அவர்கள், கடந்த 29.12.2020 அன்று தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். இவர் நமது இயக்கத்தின் முதல் மிஷனெரி சகோ. ஹேரிஸ் ஹில்டன் அவர்களுடைய மருமகனாவார். 1982-ம் ஆண்டிலிருந்து 1998-ம் ஆண்டு வரை, சுமார் 16 ஆண்டுகள் மகாராஷ்டிராவிலுள்ள பெயின்ட் மற்றும் உம்ரி பணித்தளங்களிலுள்ள குக்னா, கோண்ட் மற்றும் பர்தான் இனமக்கள் மத்தியிலும்; பின்னர் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள அடிலாபாத் பகுதியில் கோலாம் மக்கள் மத்தியிலும் குடும்பமாக ஊழியம் செய்தார்கள். அநேக சுதேச ஊழியர்களையும், திருச்சபைகளையும் அப்பகுதிகளில் பல எதிர்ப்புகளின் மத்தியிலும் மிகவும் பிரயாசப்பட்டு உருவாக்கினார்கள். கடந்த 2016-ம் ஆண்டில் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுப் படுக்கையிலிருக்கும்போதும், ஆத்தும மீட்பிற்காக ஜெபிப்பதை இவர் விட்டுவிடவில்லை. இவரது பெண்பிள்ளைகள் பிளஸ்ஸினா மற்றும் பெனிட்டாவும் திருமணம் முடிந்து குடும்பமாக வாழ்ந்து வருகிறார்கள். இவரது பிரிவால் வாடும் இவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தாரை நமது ஜெபத்தினால் தாங்கிக்கொள்வோம்.

---



திரு. S. டேனியல் அவர்கள், கடந்த 10.12.2020 அன்று தனது 73-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் திருச்சி, கைலாசபுரம் முன்னேற்றப்பணி மாவட்டத்தில் உள்ள பெல் நகர் பகுதியில் 37 வருடங்களாக நமது ஜெபக்குழுத்தலைவராக ஊழியத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். வருடந்தோறும் கிதியோனியர் முகாம் மற்றும் வாரந்தோறும் வீட்டு ஜெபக்கூடுகைகளைக் கிரமமாக நடத்தி, இப்பகுதியிலுள்ள FMPB ஆதரவாளர்களை உற்சாகப்படுத்தி வந்தவர். வட இந்திய பணித்தளங்களுக்குப் பலமுறை சென்று, மிஷனெரிகளை உற்சாகப்படுத்தியவர். BHEL நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டே, நமது ஊழிய ஆதரவாளர்கள் உள்ளங்களில் சுவிசேஷ பாரத்தைப் புகுத்தியவர். திருச்சபையில் பல்வேறு பொறுப்புகளைத் தலைமையேற்று, இப்பகுதியிலுள்ள ஏழைக்குழந்தைகளின் கல்விக்கு வித்திட்டு, ஆண்டவருடைய நாமத்திற்கு மகிமை சேர்த்தவர். இவரது மனைவி திருமதி அன்னபாக்கியம் டேனியல், மகள்கள் திருமதி ரூபி சற்குணதாஸ் குடும்பம், திருமதி மெர்சி எட்வர்ட் குடும்பம், திருமதி சாந்தி ரூபன் குடும்பம் ஆகியோரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

– கௌரவ முன்னேற்றப்பணி செயலர், திருச்சி – கைலாசபுரம்.

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2020**

| RECEIPTS | 2018 - 2019 Amount in Rs. | 2019 - 2020 Amount in Rs. | PAYMENTS | 2018 - 2019 Amount in Rs. | 2019 - 2020 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| **To Opening Balance** | | | **F C Payments** | | |
| To Cash at Bank a/c | 2,34,89,292 | 74,44,894 | **Programme Expenses:** | | |
| To Cash at Bank church a/c | 21,05,578 | 21,59,339 | By Church Expenses Support | 57,53,977 | 9,20,987 |
| To Cash at Bank FCR a/c | 2,11,95,827 | 1,69,67,702 | By Community Dev Project Medical Care | 63,56,617 | 36,73,556 |
| To Cash at Bank fund a/c | - | 39,79,318 | By Community Dev Child Care Expenses | 8,83,648 | 3,53,067 |
| To Cash on Hand a/c | 1,36,948 | 6,63,987 | By Children HR Study Scholarship Exp | 3,83,924 | 6,41,830 |
| **Foreign Currency Receipts** | | | By Community Dev Educational Expenses | 1,48,909 | 1,13,800 |
| To Bank Interest | 6,81,724 | 16,85,406 | By Staff Medical Expenses | 31,79,189 | 25,10,204 |
| To Donation children home maintenance | 69,69,852 | 70,99,007 | By Salary & Allowances | 32,15,658 | 29,25,349 |
| To Donation Christmas Gift | 2,32,970 | 2,52,450 | **Administration Expenses:** | | |
| To Donation - Church Expenses | 21,80,670 | 12,94,964 | By General, Hospitality & Maintenance | 4,34,969 | 1,58,283 |
| To Donation - Community Dev. Camps | 1,35,52,799 | 26,72,187 | By Bank Charges | 15,669 | 16,209 |
| To Donation Community Dev - Child Care | 7,18,878 | 10,43,226 | By Children Education Expenses | 12,067 | 30,62,634 |
| To Donation Community Dev - Education | - | 31,463 | By Christmas Gift | - | 1,87,500 |
| To Donation General | 1,11,291 | 6,03,994 | By Community Dev Camp Expenses | 3,583 | - |
| To Donation HR Study Scholarship | 3,73,855 | 1,81,705 | By Postage & Courier | 297 | - |
| To Donation Medical | 32,45,903 | 24,46,656 | By Printing & Stationary | 3,930 | - |
| To Donation - Monthly Pledge | 35,53,308 | 62,76,634 | By Repairs & Renewals | 30,000 | - |
| To Donation - Vocational Training | - | 18,736 | By Staff Welfare - General | 32,947 | - |
| **Domestic Receipts** | | | By Training & Dev. Expenses | 15,761 | - |
| To Bank Interest | 1,28,79,400 | 1,40,30,815 | By Travelling Expenses | 4,002 | - |
| To Donation - Annual Meet | 74,00,033 | 52,35,059 | By Vehicle Maintenance | 4,716 | - |
| To Donation - Calamity Releif | 5,12,422 | 6,000 | By Evanglists & Volunteers | 26,000 | - |
| To Donation - Children Home Maintenance | 1,23,03,713 | 1,58,30,720 | By Promotional Material Expenses | 1,40,700 | - |
| To Donation - Christmas Gift | 3,17,22,231 | 3,45,58,277 | By Magazine Postage | 17,617 | - |

JOHN & JULIAN * CHARTERED ACCOUNTANTS * FRN 014695S Chennai-10

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2020**

| RECEIPTS | 2018 - 2019 Amount in Rs. | 2019 - 2020 Amount in Rs. | PAYMENTS | 2018 - 2019 Amount in Rs. | 2019 - 2020 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To Donation - Church Expenses | 5,73,10,334 | 4,14,89,772 | **Payments from Domestic Receipts** | | |
| To Donation Community Dev - Camp | 1,18,20,443 | 1,50,10,724 | **Programme Expenses:** | | |
| To Donation Community Dev - Child Care | 14,31,41,216 | 14,39,73,880 | By Church Expenses Support | 4,72,84,801 | 4,47,46,580 |
| To Donation - Community Dev. Education | 35,04,350 | 30,26,556 | By Christmas Gift | 3,08,67,612 | 3,38,74,316 |
| To Donation - Community Dev. Health Care | 71,655 | 42,200 | By Children Education Expenses | 1,84,49,829 | 1,73,02,544 |
| To Donation Field Equipment | 10,39,812 | 12,39,025 | By Community Dev Camp Expenses | | |
| To Donation - Adult Literacy | - | 4,800 | Training & Development | 62,96,524 | 62,66,104 |
| To Donation - Linguistic Work | 8,56,800 | 15,12,410 | Community dev Camp Exp | 1,69,29,880 | 1,15,89,228 |
| To Donation for Travel | 2,800 | 6,500 | Linguistic Work | 1,31,254 | 4,59,955 |
| To Donation General | 4,08,68,922 | 4,56,26,701 | By Community Development Expenses | | |
| To Donation H.Q. Building | 20,700 | - | Community Dev. project medical care | 8,16,902 | 22,53,299 |
| To Donation HR Study Scholarship | 44,243 | - | Community Dev. Child Care Expenses | 14,30,25,777 | 13,63,26,905 |
| To Donation Medical | 57,46,408 | 1,20,12,072 | Community Dev. Educational Exp. | 2,70,523 | 5,78,983 |
| To Donation - Monthly Pledge | 30,00,66,468 | 31,41,58,307 | Vocational Training Expenses | 20,48,431 | 24,82,088 |
| To Donation - Music & Media | 4,74,911 | 9,44,538 | Community dev. Adult Literacy | 6,66,979 | 6,51,113 |
| To Donation National Staff Conference | 3,900 | - | By Children HR Study Scholarship Exp | 50,52,825 | |
| To Donation through Field congregation | - | 35,389 | By Calamity Relief Expenses | 3,04,032 | |
| To Donation - Training & Development | 18,52,860 | 4,08,672 | By General, Hospitality & Maintenance | 35,87,908 | 50,45,447 |
| To Donation - Vehicles | 64,21,464 | 89,59,678 | By Medical Expenses | 37,76,076 | 50,74,839 |
| To Earmarked Miscellaneous Income | 4,14,700 | 4,31,579 | By Meeting Expenses | | |
| To Donation Navodaya Meetings | 5,000 | - | Mission Field | 4,82,592 | 8,17,101 |
| | | | National Staff conference Exp. | 3,20,590 | |
| | | | By Postage & Courier | 4,31,723 | 4,01,115 |
| | | | By Printing & Stationary | 11,17,592 | 7,52,088 |
| | | | By Salary & Allowances | | |

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2020**

| RECEIPTS | 2018 - 2019 Amount in Rs. | 2019 - 2020 Amount in Rs. | PAYMENTS | 2018 - 2019 Amount in Rs. | 2019 - 2020 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| | | | Mission Field | 8,71,47,239 | 9,67,93,994 |
| | | | Evanglists & Volunteers | 6,03,29,372 | 5,67,73,073 |
| | | | By Rent & Rates | 1,05,97,725 | 1,11,78,697 |
| | | | By Repairs & Renewals | 34,89,831 | 23,44,395 |
| | | | By Vehicle Maintenance | 1,41,55,853 | 1,39,11,353 |
| | | | By Telephone & Trunk Calls | 32,56,952 | 31,86,404 |
| | | | By Travelling Expenses | 2,03,71,006 | 1,75,06,263 |
| | | | **Administration Expenses:** | | |
| | | | By Salary & Allowances | 4,08,20,205 | 2,91,54,050 |
| | | | By SBF Gifts | 1,31,280 | - |
| | | | By Staff Higher Study Expenses | 8,27,486 | 57,501 |
| | | | By Staff Welfare | | |
| | | | Holiday Allowance | 13,98,473 | 17,73,718 |
| | | | Warm Cloth Allowance | 24,23,400 | 24,66,850 |
| | | | Staff Welfare - General | 22,17,000 | 22,64,869 |
| | | | By Taxes & Insurance | 11,84,318 | 10,64,551 |
| | | | By Telephone & Trunk Calls | 18,38,808 | 14,98,785 |
| | | | By Travelling Expenses | 49,79,831 | 54,73,594 |
| | | | By General, Hospitality & Maintenance | 48,34,899 | 49,55,352 |
| | | | By Gratuity Paid | 46,84,648 | - |
| | | | By Interest Payable To Epf | - | 1,00,43,941 |
| | | | By Legal Fees | 6,08,240 | 2,07,820 |
| | | | By Medical Expenses | 63,51,297 | 32,35,857 |
| | | | By Meeting Expenses | | |
| | | | Administration & Mobilization | 33,99,745 | 27,01,752 |

JULIAN * CHARTERED ACCOUNTANTS FRN 014695S Chennai-10

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

### RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2020

| RECEIPTS | 2018 - 2019 Amount in Rs. | 2019 - 2020 Amount in Rs. | PAYMENTS | 2018 - 2019 Amount in Rs. | 2019 - 2020 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| | | | Annual Meet Expenses | 57,59,881 | 51,37,254 |
| | | | By Office Maintenance | 36,11,904 | 30,54,025 |
| | | | By Pension Expenses | 54,68,205 | |
| | | | By Postage & Courier | | |
| | | | Administration & Mobilization | 21,73,717 | 23,58,743 |
| | | | Magazine postage | 23,61,781 | 22,74,555 |
| | | | By Printing & Stationary | | |
| | | | Administration & Mobilization | 69,21,677 | 67,81,178 |
| | | | Magazine Printing | 86,24,970 | 94,93,708 |
| | | | By Promotional Material Expenses | 50,42,882 | 51,21,303 |
| | | | By Rent & Rates | 2,35,97,398 | 2,36,80,253 |
| | | | By Repairs & Renewals | 30,41,114 | 12,82,934 |
| | | | By Vehicle Maintenance | 27,31,390 | 23,41,158 |
| | | | By Audit Fees & Other Expenses | 94,400 | 91,600 |
| | | | By Bank Charges | 2,56,583 | 2,46,918 |
| | | | By Contribution To EPF | - | 91,90,837 |
| | | | By FBF Expenses | 2,63,300 | - |
| | | | By Contribution To Other Missions | 9,550 | - |
| | | | By Contribution to Gratuity Fund | 47,13,254 | 46,48,183 |
| | | | By Contribution To Pension Fund | 1,37,30,628 | 69,55,866 |
| | | | By Contribution To SBF | 1,26,020 | 1,24,850 |
| | | | Movements in Current Assets & Liabilities (Sch.9) | 1,97,16,144 | 3,01,44,247 |

JOHN & JULIAN * CHARTERED ACCOUNTANTS * FRN 01[illegible]S Chennai-10

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2020**

| RECEIPTS | 2018 - 2019 Amount in Rs. | 2019 - 2020 Amount in Rs. | PAYMENTS | 2018 - 2019 Amount in Rs. | 2019 - 2020 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| | | | **By Closing Balance** | | |
| | | | By Cash At Bank A/c | 74,44,894 | 88,11,392 |
| | | | By Cash At Bank Church A/c | 21,59,339 | 53,04,508 |
| | | | By Cash At Bank FCR A/c | 1,69,67,702 | 1,07,79,645 |
| | | | By Cash At Bank Fund A/c | 39,79,318 | 2,56,34,768 |
| | | | By Cash On Hand A/c | 6,63,987 | 1,29,476 |
| **TOTAL** | **71,70,33,678** | **71,33,65,343** | **TOTAL** | **71,70,33,678** | **71,33,65,343** |

**REFERRED TO IN OUR REPORT OF EVEN DATE**
**For JOHN & JULIAN**
**CHARTERED ACCOUNTANTS**
**FIRM REGN NO : 01485S**

JOHN & JULIAN * CHARTERED ACCOUNTANTS * FRN 014859S Chennai-10

**Place : Chennai**
**Date : 09-12-2020**

**SUTHARSAN THOMAS JEYARAJ**
**GENERAL SECRETARY**

**MANI SAMUEL J N S**
**TREASURER**

**M. JOHN RAVINDRAN**
**PARTNER**
**MEMBERSHIP NO.028566**
UDIN:20028566AAAAFH6348

## 1 பிப்ரவரி
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பெஞ்சமின் ஜோதி, திரு. ஆரோன்சிங் நர்சாரி
திரு. சங்கர் எம்., திருமதி. காந்தி தேவி

# ஜம்மு

### ஆர். எஸ். புரா & அக்னூர்:

**டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்**

**துதிக்க:** 3 கிராமங்களில் புதிதாக இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப் பட்டுள்ளது. படியல், லங்கார் மற்றும் பாபிலீனா ஆகிய கிராமங்களிலிருந்து 4 குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகள், வெளிசந்திப்பு ஊழியங்கள் மற்றும் சத்சங் நிகழ்ச்சிகள் யாவையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். படிலா கிராம ரேகாவைத் தோல் ஒவ்வாமை நோயிலிருந்தும், படியல் கிராம கமலாவைத் தொண்டை கோளாறிலிருந்தும் தேவன் சுகப்படுத்தினார். நமது விசுவாசிகளான குல்லியன் கிராம கிரண் தம்பதியருக்குக் குழந்தை பாக்கியத்தையும், ஆக்ராசாக் கிராம லட்சுமிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையையும் தேவன் ஈந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தெலி பஸ்தி கிராம ராகேஷையும், படியல் கிராம கோகாவையும் குடிப்பழக்கத் திலிருந்து தேவன் மீட்டெடுக்க; நமது சுதேச ஊழியரான பாஞ்சம் மற்றும் பிட்டு சுப்பு ஆகியோரின் சரீர ஆரோக்கியத்தையும், குடும்ப வாழ்வையும் தேவன் ஆசீர் வதிக்க; நமது அனைத்து விசுவாசி களும் கிறிஸ்துவின் விசுவாசத்தில் மென்மேலும் வளர; காதர்பூர் கிராம ஜான்வி மற்றும் குல்லியன் கிராம சுபம் ஆகியோரைப் பக்கவாதத்திலிருந்தும், தயான்சரை மூச்சுக்கோளாறிலிருந்தும், மெஹ்லோவல் கிராம செண்பாவைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், சாக்கர்னியா கிராம ஆஷாவைப் புற்று நோயிலிருந்தும், காதர்பூர் கிராம ஜோகிந்தரை மனநோயிலிருந்தும் தேவன் பூரணமாகக் குணப்படுத்த; கோட்லி கிராம அனில் & நேஹா, சாக்கர்னியா கிராம சாக்ஷி மற்றும் தொல்லியன் கிராம சப்னா ஆகியோருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

### தானேதார்:

**உம் பியாக் லால் & நியாங்கன் மன்**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. செத்தி, ரிவாரி, ஜரோல் மற்றும் மன்தோல் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கான திறந்தவாசலைத் தேவன் தந்துள்ளார். நமது விசுவாசியான மோகினிக்குத் தேவன் தந்த சுகப்பிரசவத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மன உளைச்சலுக்குள்ளாகி, 20 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து கையெலும்பு முறிவு ஏற்பட்டு கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும் நமது புதிய தொடர்பாளர் சந்திரன் என்பவருக்கு அற்புத சுகம் கிடைக்க; நமது விசுவாசிகள் சுவிசேஷத்தைத் தங்களது உற்றார் உறவினர்களுக்கு எடுத்துரைக்க; சிறுநீரகக் கல் கோளாறிலிருந்து ஹுக்கும் ராமையும், நெஞ்சுவலியிலிருந்து புல்முனியையும் கர்த்தர் சுகமாக்க; நமது விசுவாசிகளான கமலா மற்றும் சோனுவைப் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

## 2 பிப்ரவரி
செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆர்தர் ஜெபராஜ்
திரு. பிரபாகர் என்.
திருமதி. வசந்தராணி ஜார்ஜ்
திருமதி. ரோஷிலா மொசாஹரி
திருமதி. ஜாய்ஸ் ஷோபனா
திரு. வாபெய் கோஹ்மோ சோஜா
திரு. மர்கூஸ் மால்தோ
திருமதி. மணினி பெபர்த்தா
திரு. ஜோசப் கிருபாகரன் எஸ்.

### ரோஹ்ரு:
**ஜாண்சன் சங்கர் & ஜெபராணி**

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். 2 கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. செலு, விமலா, சுனிதா மற்றும் 4 வயது நிரம்பிய ஆரவ் ஆகியோரைப் பொல்லாத பிசாசுகளின் பிடிகளிலிருந்து தேவன் விடுவித்தார். மஞ்சள்காமாலை வியாதியிலிருந்து ரேகாவையும், கழுத்துக்கட்டியிலிருந்து புதன்தாஸையும் தேவன் சுகப்படுத்தியமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி ரமேஷ் ஆலய ஆராதனைகளில் உற்சாகமாகக் கலந்துக்கொள்ள; நேபாளத்திற்கு இடம் பெயர்ந்துச் சென்றுள்ள நமது விசுவாசிகளான சுரேஷ் மற்றும் வினோத் சுகபத்திரமாய் வீடுவந்துச்சேர; அமித் மற்றும் சுர்ஜித் குடிப்பழக்கத்திலிருந்தும், ரோமன் பகதூர், மனிஷா மற்றும் நிஹில் ஆகியோர் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்தும் முற்றிலுமாய் அற்புத விடுதலை பெற ஜெபிப்போம்.

### ஹிமாச்சல் பிராந்திய அலுவலகம் :
**த்சாங்சே சங்தம் & சுச்சானோ**

**துதிக்க:** நமது சுவிசேஷக்குழு 9 கிராமங்களுக்குச் சென்று, புதிதாக இயேசுவின் அன்பை அக்கிராம மக்களுடன் பகர்ந்துக்கொண்டனர். பெரிய விபத்திலிருந்து தேவன் நமது சுதேச ஊழியர்களான திரு & திருமதி சிக்கந்தரைச் சிறிய காயங்களுடன் உயிர் பிழைக்கச் செய்தார். காஷாபட் பகுதி விசுவாசிகள் தங்களுக்கென ஆலயம் கட்ட ஒரு சிறிய நிலப்பகுதியை இலவசமாகத் தர முன் வந்துள்ளனர். கோவிட்-19னால் பாதிப்பிற்குள்ளான நமது அனைத்து விசுவாசிகளையும் தேவன் உயிர்ச்சேதமின்றிப் பாதுகாத்தார். நமது ஊழியர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் யாவரையும் தேவன் அதிக குளிரின் தாக்கத்திற்கு விலக்கிக் காத்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்களான மகர்சிங் & சத்யா குடும்பம், மன்தாஸ் & அல்பனா குடும்பம், சந்தீப், சாய்தி தேவி, அமான், பிரசாந்த், குணால், சஷீல், சோம் கிருஷ்ணா, லேஹ்ராம் குடும்பம், பால்தேவ், ராஜேஷ் குடும்பம், கோவிந்த குமாரி, ரதியா, குன்சால், சுமன், ராகேஷ், சூரஜ், நரேஷ் & டிம்பிள் குடும்பம், ஜோன்தாஸ் & துர்மா குடும்பம், கிருஷ்ணா & கவிதா குடும்பம் மற்றும் நிஷா ஆகியோர் இரட்சிக்கப்பட; திலாத், நிம்லாந்த் மற்றும் ஜாக்ரி ஆகிய பகுதிகளில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள துணைமையங்களைச் சார்ந்த மக்கள் கூட்டத்தில் அதிகமானோர் கர்த்தர் பக்கம் திரும்ப; எதிர்ப்புகளின் மத்தியிலும் நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்க; நமது ஊழியத்தின் விரிவாக்கத்திற்கு நமது ஊழியர்களுடன் இணைந்துப் பணிபுரிய இன்னும் அநேக சுதேச ஊழியர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

# 3 பிப்ரவரி

புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. முருகம்மாள் எஸ்தர் ஆல்பர்ட் பிரபாகரன்

## பஞ்சாப்

### ஜைத்தோ:

**சித்தரஞ்சன் தான்டி & தேஜேஸ்விதா**

**துதிக்க:** பல்வேறு இடங்களில் வைத்து நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூடுகைகள், சத்சங் நிகழ்ச்சிகள் மற்றும் பெண்கள் கூடுகைகளைத் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். ராணி கௌர், விந்தர் கௌர், வீர்சந்த் சிங், ஜோதி கௌர், குல்விந்தர் கௌர் மற்றும் பிங்கி கௌர் ஆகியோரைப் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து கர்த்தர் விடுவித்தார். தவறான பொய்குற்றச்சாட்டினிமித்தம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நமது விசுவாசியான பிரதீப் சிங்கிற்கு விடுதலை கிடைக்க தேவன் கிருபை செய்தார். நமது விசுவாசி ரஜினி கௌருக்கு 7 வருட திருமண வாழ்விற்குப்பின் அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுக்கவும், ஜுத்ஜெல் கிராம ஜஹசீர் சிங்கின் மனைவிக்கு 8 வருட திருமண வாழ்விற்குப்பின் கர்ப்பந்தரிக்கவும் தேவன் கிருபை செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்தை விட்டுப் பிரிந்துச்சென்று, பலவிதங்களில் நமக்கு இடையூறு தருகின்ற நமது சுதேச ஊழியர்கள் மனந்திரும்ப; கோடாக்புரா டவுன் பகுதியைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளர் சுக்பிரீத் சிங்கின் குடும்பத்தினருக்குப் பிசாசின் மீதிருக்கும் பயத்தின் ஆவி விலகிப்போக; நமது விசுவாசி பிங்கி கௌருக்கு மழலை செல்வம் கிடைக்க; நமது ஊழிய நிகழ்ச்சிகளில் முதன்முறையாகப் பங்குப்பெற்று சுவிசேஷத்தை அறிந்துள்ள நமது புதிய மக்களின் இரட்சிப்பிற்காக; கோடாக்புரா மற்றும் மட்டா ஆகிய பகுதிகளில் வேதாகம வகுப்புகள் தொடங்கப்பட; நமது ஊழியத்தைத் திறம்படச்செய்ய விசுவாசிகளையும் சபை மூப்பர்களையும் தேவன் ஆவிக்குரிய விதத்தில் புதுப்பிக்க ஜெபிப்போம்.

### மோகா:

**ஜஸ்டின் & சாராள் ஜாண்சி ராணி**

**துதிக்க:** புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவின் அன்பிற்குள் வந்துள்ளனர். புதிதாக 4 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. சோனு மற்றும் சுக்ஜித் அவர்களின் குடும்ப வாழ்வில் கர்த்தர் சமாதானத்தைக் கட்டளையிட்டார். நமது சபை மூப்பர் சரண்தாஸின் வாழ்வாதார தேவைகளைச் சந்திக்க ஒரு நல்ல வேலையைத் தேவன் அவருக்குக் கிடைக்கச் செய்தார். நமது விசுவாசி மன்பிரீத்திற்குத் தேவன் மழலை பாக்கியம் அளித்தார். ஜாஸ், சன்னி, மணி மற்றும் சிம்ரன் ஆகிய நமது புதிய தொடர்பாளர்கள் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர்ந்து வரக் கர்த்தர் உதவி புரிகிறார். நீதிமன்றத்திலிருந்து நமது விசுவாசி ஜோதிக்குத் தனது நிலப்பிரச்சனை வழக்கில் நீதி கிடைக்க தேவன் கிருபை பாராட்டியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; அஜித்வால், சட்சா, ராய்கோட், பஸ்ஸியன், பிண்டியன், பத்தேகார், கிஷான்புரா, கமல்புரா, ஜக்ரோன், கோட்லி, தரம்கோட், போபாரா, துடிக்கி ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; சரண் சிங், சுக்கி கௌர், ஆர்த்தி, மது, சன்னி, ஜஸ்வீர் சிங் மற்றும் ஜஸ்பிரீத் கௌர் ஆகியோர் சுவிசேஷத்தைக் கேட்டதோடு நின்றுவிடாமல், அதில் அதிக ஆர்வம் செலுத்த; கிரண் கௌர் மற்றும் ஜோதியின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவ; நமது விசுவாசிகளான ஜோதி மற்றும் கோனு ஆகியோர் குழந்தை செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

## 4 பிப்ரவரி
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜெபக்குமார் பெரியசாமி

### பர்னாலா & பட்டிண்டா:
**கிருபா ரக்ஷனா பரே & ஷகினா**

**துதிக்க:** 5 நபர்கள் புதிதாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கவும் தேவன் ஒத்தாசை புரிந்தார். ஜெட்டுகியா கிராமத்தில் ஓர் புதிய திருச்சபை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜெட்டுகியா, கரார் வாலா, அலக்கியா, தில்வா, பகத்பூர் மவூத், சோலுபதி, பார்பகி, கோட்டுதுணா, கலியாகியா மற்றும் பத்பார் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட பல்வேறு ஊழிய நிகழ்ச்சிகளைத் தேவன் சிறப்பித்துத் தந்தார். நமது விசுவாசி அஜெயுடைய தொலைந்துப் போன இருசக்கர வாகனம் ஒரு வருடத்திற்குப் பின்பு மீண்டும் கிடைக்க தேவன் அற்புதம் செய்தார். பெரிய விபத்தினின்று ராணி கௌரைத் தேவன் காப்பாற்றியமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலியாகியா மற்றும் தாஜோகியா ஆகிய பகுதிகளில் புதிய திருச்சபைகள் துவங்கப்பட; பாய்ரூபா ஆலயச் சுற்றுச்சுவர் கட்டப்பட; பர்னாலா மற்றும் பட்டிண்டா ஆகிய இரு பணித்தளங்களிலுமுள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

# ஹரியானா

### பிஹோவா:
**கார்த்திகேயன் & ஜெயந்தி**

**துதிக்க:** இரு நபர்கள் புதிதாகக் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 மாதங்களுக்கான சம்பளத்தை நமது விசுவாசி அசோக் பிஹால் திரும்ப கிடைக்கப்பெற்றார். குர்மித் மற்றும் கஜாலுக்குத் தேவன் குழந்தை செல்வம் நல்கினார். பிசாசின் பிடியிலிருந்து தேவன் அஞ்சுவை விடுவித்து இரட்சித்தார். நமது விசுவாசி சங்கருக்குச் சொந்தமாக வீடு கட்டி முடிக்கத் தேவன் உதவிப் புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தட்டியாவீர், காராபகல், சோமஜ்ரா, சல்தானியா, பாராவாலி, குலா, தனோதா, படேச்சா, லால்பூர், நந்தகட், தம்புரா மற்றும் பரோத் ஆகிய பகுதிகளில் நமது ஊழியங்கள் வளர்ச்சிப் பெற; சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டும் ராம்குமார், தீபக் மற்றும் ஆஷாராணி ஆகியோரின் ஆத்ம ரட்சிப்பிற்காக; நமது விசுவாசிகளான சஞ்ஜய், பிரதீப் மற்றும் ஆஷிஷ் ஆகியோருக்குத் தகுந்த வேலை வாய்ப்புகள் கிடைக்க; பின்மாற்றமடைந்துள்ள பவனின் குடும்பம் மீண்டும் விசுவாசத்திற்குள் வர கர்த்தர் அனுக்கிரகம் அருள ஜெபிப்போம்.

### தோஷம்: ஜாண் டேவிட்சன்

**துதிக்க:** அநேக இடங்களில் நமது விசுவாசிகள் தாங்களாகவே கூட்டங்களை ஒழுங்குச்செய்திருந்தனர். கிராவர் கிராமத்தில் அதிகமான ஜனங்கள் சுவிசேஷத்தின் மீது விருப்பம் காட்டுகின்றனர். மரத்தின் மீதிருந்து கீழே விழுந்த சுரேந்தரைத் தேவன் காப்பாற்றியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மியோஸ் சமூகத்தினரின் இரட்சிப்பிற்காக; தானிமாகு, பார்சி மற்றும் கிராவர் ஆகிய பகுதிகளில் சிறிய ஜெபக் குழுக்கள் தொடங்கப்பட; தோஷம் பணித்தளத்தில் பெரியளவில் மக்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாக; வருகிற நாட்களில் நடக்கவுள்ள சத்சங் கூடுகைகள், இரவுநேர ஜெபக்கூடுகைகள், வெளிசந்திப்பு ஊழியங்கள் மற்றும் ஞாயிறு ஆராதனைகள் யாவையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுக்க ஜெபிப்போம்.

## 5 பிப்ரவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அற்புதம் செல்வி விஜய்
திரு. தெய்வநாயகம் சாமுவேல்
திருமதி. அனுகாமி எக்கா ஜஹர்சய்
திரு. வெங்கட பிரவீன் குமார் கே.

### ஹரியானா பிராந்தியம்:
**பிபாபா பானி & பித்திகா**

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 16 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கார் விபத்திலிருந்து தேவன் லட்சுமியைப் பாதுகாத்தார். கிராமத்தினரும், வினோத் குடும்பத்தினரும் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியின் மீது அதிக வாஞ்சை காட்டுகின்றனர். மனநோயிலிருந்து சுமித்ராவையும், குழந்தையின்மைக் குறையிலிருந்து மம்தாவையும் தேவன் சுகப்படுத்தி ஆசீர்வதித்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராஜ்புரா மற்றும் பனக்கேடா ஆகிய கிராமங்களில் ஆலயங்கள் கட்ட நல்ல நிலங்கள் கிடைக்க; சோட்டாலால் குடும்பத்தினரின் ஆத்தும மீட்பிற்காக; பிற சுயேட்சை ஊழியர்களின் திசை திருப்புதலுக்கு ஆளாகாதவாறு நமது சபை மூப்பர்கள், நமது ஊழியத்தில் உண்மையோடும் நேர்மையோடும் ஊழியம் செய்ய; ஆசீர், ஜகமால் வாலி மற்றும் தகத்மால் ஆகிய கிராமங்களின் திருச்சபையினர் கிரமமாக ஆலய ஆராதனைகளில் பங்குப் பெற்று ஆத்தும பெலன் பெற; எல்லாத் திருச்சபைகளிலும் சிறுவர்களுக்கான வேதப்பாட வகுப்புகளை நடத்துவதற்கேற்ற தன்னார்வ ஊழியர்கள் கிடைக்க; தபாவாலி ஆலய மூப்பர்கள் மற்றும் விசுவாசிகள் யாவரும் ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர ஜெபிப்போம்.

### ஜீவன் நகர்:
**அலியாக்கீம் ஜெனா & தீபிகா**

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் இணைந்துள்ளனர். புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ரசலியா கிராம கிரணைத் தேவன் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து காத்து இரட்சித்தார். தபாவாலி பகுதியிலிருந்து 4 குடும்பங்கள் புதிதாக நமது ஆராதனையில் கிரமமாகப் பங்குப்பெறுகின்றனர். தேவன் நமது விசுவாசிகளைச் சுவிசேஷத்தை எதிர்க்கும் கூட்டத்தினரின் கரங்களுக்கு விலக்கிக் காத்து வருகிறார். 3 நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபக்கூட்டத்தில் வைத்து நமது சாந்த் நகர் சுதேச ஊழியர் ராஜேந்தர் சிங் மற்றும் விசுவாசிகள் யாவரும் செய்த ஜெபத்தின் மூலம் தேவன் நமது ஜிதாத்வாலி கிராம பல்விந்தரின் மனைவிக்குத் தற்கொலை ஆவியின் சிந்தையிலிருந்து அற்புதமாக விடுதலை கொடுத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மெய்சத்தியத்தைக் கேட்டிருப்போர் யாவரும் இயேசுகிறிஸ்துவை முழுமனதுடன் ஏற்க; தபாவாலி கிராம நமது விசுவாசி அனித்திற்குத் தகுந்த வாழ்க்கைத்துணை அமைய; இப்பணித் தளத்தில் வருங்காலங்களில் 10 திருச்சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்திருக்கும் திட்டத்தைத் தேவன் ஆசீர்வதித்துத் தர; தபாவாலி திருச்சபையில் ஆராதனை நடத்த நல்ல சபை மூப்பர்கள் தெரிந்தெடுக்கப்பட; 20 வருடங்களாகப் படுத்தப்படுக்கையாய் இருக்கும் சாந்த் நகரைச் சார்ந்த ஹர்ஜித் சிங்கிற்குத் தேவன் அற்புத சுகம் நல்க ஜெபிப்போம்.

## 6 பிப்ரவரி
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பெட்ரீசியா தமிழ் செல்வி குமார்
திரு. ஹமோம் நாபா சிங்
திருமதி. நெங்ஹோய்வா துபோய்

# உத்தரகாண்ட்

### மல்தன்சோர்: ஷிஷுபால் & அனிதா

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்கள் சுவி சேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. மோகன்நகர் ஆலயத்தில் ஆலய சபைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. பெரிய விபத்தி னின்று தேவன் நமது சுதேச ஊழியர் கிஷோரையும், நமது விசுவாசி ராஜுவையும் காப்பாற்றியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தரி திருச்சபையில் மீண்டும் ஆலய ஆராதனை துவங்கப்பட; ஜங்கல் பூல், போக்பூர் மற்றும் தரி ஆகிய திருச் சபைகளில் சபைக்குழுக்கள் உருவாக்கப்பட; ஆராதனைகள் மற்றும் வெளிசந்திப்பு ஊழியங்களைத் தாங்களாகவே முன் வந்து நடத்த இங்குள்ள சபை மூப்பர்கள் யாவரும் பயிற்றுவிக்கப்பட; மெல்தான், சிவநாத்பூர் மற்றும் நயிபஸ்தி ஆகிய கிராமங்களிலுள்ள நமது புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

### ஸ்ரீ கங்காநகர்:

### வி. குமார் & பெட்ரிஷியா

**துதிக்க:** 7 C கிராமத்திலுள்ள பெண்களும் சிறார்களும் சுவிசேஷ வசனங்களின் மீது மிகுந்த நாட்டம் காண்பிக்கின்றனர். 6 S கிராமத்திலுள்ள நமது விசுவாசி சுபாஷ் தன்னார்வமாக நமது ஊழியங்களில் பலக்கோணங்களில் உதவி புரிகிறார். நமது புதிய தொடர்பாளரான ஷாலு முறையாக வேதாகமத்தை வாசித்து, கிறிஸ்துவில் வளர்ந்து வருகின்றார். நமது விசுவாசி விக்ரம் சிங் சொந்தமாக ஒரு வீட்டைத் தனக்கென கட்டி முடிக்கவும், தனது மகளின் திருமண நிச்சயதார்த்தத்தை வெகு நேர்த்தியாக நடத்தி முடிக்கவும் கர்த்தர் அவருடனிருந்து உதவி செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 5 H, 16 S, மஜிவாலா, SSB காலனி, மோடா மற்றும் குருசார் ஆகிய கிராமங்களில் குழந்தைகள், வாலிபர்கள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் இனிவரும் நாட்களில் நடக்க இருக்கிற ஊழியங்களில் தேவ ஆசீர்வாதம் விளங்க; நமது விசுவாசி களான அமன்தீப், ஸ்வேதா, சர்வன், சுக்பிரீத், புஷ்பேந்தர், கிரண் மற்றும் சுனில் ஆகியோருக்குத் தகுந்த வேலைகள் கிடைக்க; சந்தீப் மற்றும் மம்தா இரட்சிப்படைய; கணினித்துறையில் கல்விப் பயின்றுவரும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளான சுக்பிரீத், ராமன், சர்ப்ஜுத் மற்றும் ஆமான் ஆகியோருக்கு ஏற்ற கல்வி ஞானத்தைக் கர்த்தர் கொடுக்க ஜெபிப்போம்.

## *ஆறடி தூரத்தில் ரயில்!*

*குஜராத், டபோயி பணித்தளத்தைச் சார்ந்த நமது விசுவாசிகளான ராய்சிங்பாய் மற்றும் இவரது 4 நண்பர்களுமாக ஒரு சமயம் ரயில் தடம் (track) சீரமைப்புப்பணி நடந்துக்கொண்டி ருந்த அத்தட பாதையில் அமர்ந்து, பேசிக்கொண்டிருந்தனர். அவ்வேளையில் திடீரென முன்னறிவிப்பாக எந்தவித ஒலியோ, அடையாளமோ இல்லாதபடி ஓர் ரயில்வண்டி இவர்களை நோக்கி வந்துக்கொண்டிருந்தது. இவர்களுக்கும் ரயில்வண்டிக்குமிடையே ஆறடி தூரம் இருக்கும் பட்சத்திலேயே அங்கே அமர்ந் திருந்த நமது 5 விசுவாசிகளில் ஒருவர் இதைத் தற்செயலாகக் கண்டார். உடனே, அவரது மீதி 4 நண்பர்களையும்கூட தடத்திற்கு வெளியே வேகமாக இழுத்துத் தள்ளினார். இவ்வாறு இந்த 5 பேரையும் ரயில்வண்டியின் சக்கரங்களுக்கு இரையாகாதபடி விலக்கிக் காத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!*

## 7 பிப்ரவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. துரைசாமி கே. ஃபிரான்சிஸ்
திரு. பிரசாந்த் மீசாலா
திருமதி. பத்மாவதி நாராயண நாயக்
திருமதி. தனபுஷ்பம் அருள்ராஜ்

### அனுப்கார்: போடார் அம்ருத்பாய் & சுவேரா மார்த்தா

**துதிக்க:** 36 GB, 17 A தானி ஆகிய கிராமங்களில் நடைபெற்ற சத்சங் நிகழ்ச்சிகளைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். 10 கிராமங்களில் ஊழியப் பின்தொடர்பணி மற்றும் வீடு சந்திப்பு ஊழியங்களை வெகுச்சிறப்பாக நடத்தி முடிக்கக் கர்த்தர் கிருபை செய்தார். 26 A, பிரேமா நகர், 13 K, விஜய் நகர் மற்றும் கரசனா ஆகிய பகுதிகளில் நடைபெற்ற வேதப்பாட நிகழ்ச்சிகளைப் பலவிதங்களில் அநேகருக்குத் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். நமது விசுவாசி குல்விந்தரின் மனைவிக்குத் தேவன் சுகப்பிரசவத்தை நல்கினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அனுப்கார் பணித்தளத்தில் ஓர் ஆலயம் கட்டத் தகுந்த நிலம் கிடைக்க; மகேந்திர சிங், சத்பால், அருண், சுமித்ரா, ஓம் பிரகாஷ் மற்றும் பாபுவின் குடும்பத்தினர் ஆகிய யாவரும் இரட்சிக்கப்பட; சாத்ரானா திருச்சபையினரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நுரையீரல் பிரச்சனையிலிருந்து ஜெகதீஷ்பாய் மற்றும் புற்றுநோயிலிருந்து மகேந்திர சிங் ஆகியோர் பூரண சுகமடைய; நமது புதிய தொடர்பாளர்களான இந்துராஜ் சோனி, மகேந்திர சிங், மோகன் அரோதா, முக்காராம், சந்துரு, ஓம் பிரகாஷ், ஹர்தேவ் சிங் மற்றும் தாராசிங்கின் குடும்பம் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### ஹனுமான்கட்: பவுலோஸ் பர்ஜோ & பினிட்டா டொப்போ

**துதிக்க:** ராஜ்புரா மற்றும் பாலாசக் ஆகிய இரு கிராமங்களில் சுவிசேஷம் புதிதாக உரைக்கப்பட்டுள்ளது. நமது விசுவாசி பாலிஜிந்தர் சிங்கின் திருமணம் கிறிஸ்தவ முறையில் நடத்தப்பட தேவன் ஒத்தாசை செய்தார். நமது விசுவாசி ஹர்பிரீத் சிங் தனது வாழ்வாதார தேவைக்கேற்றவாறு ஒரு கடையைத் திறக்கக் கர்த்தர் கிருபை பாராட்டியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசுவின் சுவிசேஷத்தின் மீது விருப்பம் காட்டும் ஜீத்துவின் இரட்சிப்பிற்காக; நாக்ரானா கிராம அனைத்து விசுவாசிகளும் ஆலய ஆராதனைக்கு ஒழுங்காக வந்துக் கலந்துக்கொள்ள; புதிய ஏற்பாட்டைப் பெற்றுக்கொண்டோர் யாவரும் தினமும் அதை வாசிக்கவும், கர்த்தரில் நாளுக்குநாள் வளரவும்; நாக்ரானா கிராம லுகாத் மற்றும் ஹர்தேவ் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.

### விசுவாச கிரியை தந்த விளைச்சலும் அதன் விளைவும்!

*மகாராஷ்டிரா, ஜிம்மலகட்டா பணித்தளத்தில் நமது மிஷனெரிகள் அங்குள்ள சில விசுவாசிகளுடன் அவர்களது விவசாயத்திற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினர். அதில் நமது விசுவாசி ராமகிருஷ்ணா துர்கம் என்பவரின் குடும்பம் நமது மிஷனெரிகள் கொடுத்த ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு, விசுவாச ஜெபத்துடன் தங்களது விவசாயத்தொழிலில் ஈடுபட்டனர். அதன்மூலம் முந்திய முறை 29 சாக்கு மூட்டைகளளவு தானியங்களை விளைச்சலாகப் பெற்ற இவர்கள், இம்முறை 40 மூட்டைகளளவு தானியங்களைப் பெரும் விளைச்சலாகப் பெற்றனர். ஆகையால், அதன் விளைவாக இவர்களது விசுவாசம் மேலும் வலுப்பெற்று, குடும்பமாக தற்போது ஆலயம் கட்டுவதற்கென ஒரு நிலப்பகுதியை இலவசமாகத் தர முன் வந்துள்ளனர். அல்லேலூயா! தேவனுக்கே துதி!*

8 பிப்ரவரி
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. சிபி செல்வின் சாம்
திருமதி. கவித் சுனிதாபேன் ரஷ்யாபாய்

# உத்தரப் பிரதேசம்

## பர்த்தனா:

### சுரேஷ் மால்தோ & பிரேம்லதா

**துதிக்க:** புதிதாக 12 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. அசாத்பூர், பவனக்பூர், பிதுனா, கார்கிபுரா, கமல் சிங்புரா, லச்சிராம்புரா, மெஹனா, மிலக், முர்சா மற்றும் வைசோலி ஆகிய இடங்களில் நடந்த வெளிசந்திப்பு ஊழியங்களைத் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். பொய்க்குற்றச்சாட்டு மற்றும் கை தகராறுகளிலிருந்து மத்திராம்பூர் கிராம ஜய்வீர் குடும்பத்தைத் தேவன் காப்பாற்றினார். சாரையா பகுதி கரண்சிங் மற்றும் சோழ பர்த்தனா பகுதி மோகினி ஆகியோரைப் பிசாசின் பிடிகளிலிருந்து தேவன் மீட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முர்சா பகுதியில் புதிதாகத் துவங்கப்பட்ட திருச்சபையின் ஆவிக்குரிய நல்வளர்ச்சிக்காக; மத்திராம்பூர், மிலக் மற்றும் வைசோலி ஆகிய பகுதிகளில் நடக்கப்போகும் பெண்கள் கூடுகையைத் தேவன் ஆசீர்வதித்துக் கொடுக்க; மத்திராம்பூர் ஜய்வீருக்கு இருக்கும் நிலப்பிரச்சனையினால் அவரும், அவரது குடும்பமும் கொடிய மக்களின் கைகளுக்குத் தொடர்ந்து விலக்கிக் காக்கப்பட; சாக்ரவா கிராம ஊர்மிளா, நாக்லா பச்சாய் கிராம சீமா, சமஸ்தபூர் கிராம மனோஜ்குமாரி ஆகியோர் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து முற்றிலுமாய் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## காட்டம்பூர்:

### ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** 9 நபர்கள் முதன்முறையாகக் கிறிஸ்துவின் அன்பைக் குறித்துக் கேள்விப் பட்டுள்ளனர். புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. மூப்பர்கள் கூடுகை மற்றும் பணித்தள சபைகளின் ஆலோசனைக்கூட்டங்கள் யாவும் சிறப்பாக நடைபெற்று முடிந்தன. கோண்டா மற்றும் பிந்த் சிறுவர் விடுதி களில் வசிக்கும் பிள்ளைகளை நேரில் கண்டு ஆவிக்குரிய மற்றும் நல்லொழுக்கக் காரியங்களில் அவர்களை ஊக்கப்படுத்த நமது மிஷனெரிகளுக்குக் கர்த்தர் உதவிச்செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழிய நிகழ்ச்சிகளில் கலந்துக்கொண்டோர் அனைவரும் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வரும் நாட்களில் நடத்தத் தீர்மானித்திருக்கும் ஆவிக்குரிய கூட்டங்கள் அனைத்தும் விசுவாசிகளின் ஆவிக்குரிய பெலத்தைக் கிறிஸ்துவில் மேம்படுத்துவதற்கு ஏதுவாக அமைய; குடும்பத்தில் பல்வேறு ஆசீர் வாதங்களைக் கர்த்தரிடமிருந்து எதிர் நோக்கிக் காத்திருக்கும் வினோத் மற்றும் ரோஷன் ஆகியோரின் குடும்பங்களைத் தேவன் ஆசீர்வதிக்க; நமது ஞாயிறு வேதாகமப்பள்ளி ஆசிரியைகளான மகிமா, பிரியங்கா, ஸ்ருதி, ஆர்த்தி மற்றும் சாரதா ஆகியோர் சிறுவர்கள் மத்தியில் உற்சாகமாக ஊழியம் செய்திட ஜெபிப்போம்.

## 9 பிப்ரவரி
செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. ஜெசிந்த் ஜோவன்னா ராமமுனி பிரசாத்
திருமதி. தீனா குமாரி பெபர்தா
திருமதி. துர்கா தேவி ரூத் மேரி

### டூண்ட்லா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் இயேசுகிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளார். 3 கிராமங்களில் புதிதாகக் கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தி பறை சாற்றப்பட்டுள்ளது. தௌராசி, தனுமாய், ஃப்ரோஜாபாத் மற்றும் கயமாய் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற வெளிசந்திப்பு ஊழியங்களையும், ஃப்ரோஜாபாத் மற்றும் டூண்ட்லா ஆகிய பகுதிகளில் நடைபெற்ற பெண்கள் கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். கயமாய் கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நமது இப்பணித்தள ஊழியத்தை மேலும் விரிவாக்கம் செய்ய ஒரு தன்னார்வ ஊழியரைத் தேவன் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நாக்லா தோட்டாராம், நாக்லா சைதாலால் மற்றும் குருதாத்பூர் ஆகிய கிராம விசுவாசிகளின் இடையில் நடந்த ஊழியப்பின்தொடர்பணிக்கான நற்பலனை நாம் தாராளமாய்க் காண; கயமாய் கிராம ஷியாம் சிங், பண்டு மற்றும் டைடஸ் ஆகியோரின் குடும்பத்தினர் யாவரும் இரட்சிக்கப்பட; சுவிசேஷத்தின் மீது உற்சாகமாக அக்கறை காட்டும் நமது புதிய தொடர்பாளர்களான விஜய் பாரதி, பப்லு மற்றும் புவனேஷ் ஆகியோருக்காக; தனுமாய் கிராம நமது விசுவாசிகளான முன்னாலால், லக்ஷ்மண் சிங் மற்றும் ரஜ்னிஷ் ஆகியோரின் குடும்பங்கள் விசுவாசத்தில் இன்னும் ஸ்திரப்பட; தனுமாய் மற்றும் தௌராசி ஆகிய கிராமங்களில் மீண்டும் ஆலய ஆராதனைகள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

### புந்தேல்கண்ட் பிராந்தியம்:
### என். ராஜதுரை & பிரேமா

**துதிக்க:** கடௌரா பணித்தள நமது சுதேச ஊழியர் வினோத் மற்றும் தன்னார்வ ஊழியர் அஜய் ஆகியோரைத் தேவன் இருசக்கர வாகன விபத்தினின்று பாது காத்தார். சிவ்னி கிராமத்தில் இயேசு திரைப்பட ஊழியத்தின் போது ஏற்பட்ட எதிர்ப்பில் நமது சுதேச ஊழியர்களைத் தேவன் எதிர்ப்பாளர்களின் கைகளுக்கு விலக்கிக் காத்தார். குணா பணித்தளத்தைச் சார்ந்த கேதர்நாத், சிங்கார்பூர் மற்றும் காதி ஆகிய இடங்களில் புதிதாகத் திருச்சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பிரேம்நகர் ஆலயச் சுற்றுச்சுவர் கட்டுமானப்பணி சிறப்பாக நிறைவுறக் கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருடைய கிருபையால் கலாபானி கிராம ஆலயக்கட்டுமானப்பணி சிறப்பான விதத்தில் நடைபெற்று வருகிறது. பிந்த் திருச்சபையினரின் ஐக்கியம் கிறிஸ்துவிற்குள் வளர்ந்து வருகிறது. மகாராஷ்டிராவிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் நட் சமுதாயத்தினர் அதிகளவில் பிந்த் திருச்சபைக்கு வருகை புரிகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜான்சி சிறுவர் விடுதிக்கட்டுமானப்பணிக்கான திட்டத்தை அமல்படுத்த அரசு அனுமதிக்க; மோகன்பூர் மற்றும் கலாபானி ஆகிய கிராமங்களில் நடைபெறப்போகும் ஆலயப்பிரதிஷ்டைகளைத் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்திட; சீரான சாலை வசதிகளற்ற பகுதிகளில் வாழும் சாம்ரானியா பணித்தள பீல் இன மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களுக்காக; தய் திருச்சபை விசுவாசிகள் ஆராதனைக்கு ஒழுங்காக வந்துப் பங்குப்பெற; பிந்த் பணித்தள சுவிசேஷ எதிர்ப்பாளர்களின் உள்ளங்கள் யாவும் மனமாற்றமடைய ஜெபிப்போம்.

## 10 பிப்ரவரி
புதன்
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. சாலமோன் ஏ.

### கோண்டா சிறுவர் விடுதி:
**ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா**

**துதிக்க:** நமது விடுதிப்பிள்ளைகள் யாவரும் அருகாமையிலுள்ள திருச்சபை ஆராதனைகளில் பங்குப்பெற்று நமது ஊழிய நிகழ்ச்சிகளைச் சிறப்பித்துத் தர தேவன் உதவிக்கரம் நீட்டுகிறார். கல்வி மற்றும் ஆவிக்குரிய நிலைகளில் கோண்டா விடுதிப்பிள்ளைகள் யாவரும் நன்கு வளர்ந்து வர தேவன் அநுக்கிரகம் செய்கிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பகுதிகளில் 10-ம் வகுப்புப் படிக்கும் மாணவர்களின் அரசாங்கத் தேர்விற்கான ஆயத்தங்களுக்காக; திலக்காய், குர்குர்பொகுவா, ராம்பூர் மற்றும் தருலா குலாம் ஆகிய கிராம மக்களின் ஆத்தும விடுதலைக்காக; புதிய ஏற்பாட்டைப் பெற்றிருக்கும் வாலிபர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### டப்ரா: சத்திகாந்த் பரிச்சா & சகரிகா

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவி சேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏராள மான சவால்களின் மத்தியிலும், அனைத்து ஊழிய நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்தி முடிக்கக் கர்த்தர் கிருபை பாராட்டினார். தற்போது நாடெங்கும் நிலவிக்கொண்டிருக்கும் சூழ்நிலை களின் இடையிலும் நமது ஊழியத்தை முன்னோக்கிச் செல்ல தேவன் உதவிப் புரிந்து வருகிறார். ஆலயச்சுற்றுச்சுவர் பணிகள் சிறப்பாக நடக்கக் கர்த்தர் ஒத்தாசை புரிகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்த்தருடைய வசனத்தின் மீது ஆர்வம் காட்டும் விரேந்திர சாகரின் இரட்சிப்பிற்காக; அனைத்து திருச்சபைகளிலும் சபைக்குழுக்கள் உருவாக்கப்பட; பிரேம் நகரில் நடக்கும் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் நிறைவுற; அதிக மக்களைக் கிறிஸ்து வண்டை கொண்டு வருவதற்கான காரியத்தில் நமது சுதேச ஊழியர்களும் சபை மூப்பர்களும் முனைப்புடன் செயல் பட; கித்தோண்டா திருச்சபையினருக்கு ஓர் ஆலயம் கட்டத் தேவையான நிலம் வாங்கப்பட; சுல்தான்பூர் கிராம ஆலய நிலம் தகுந்த முறையில் நிலப்பதிவுச் செய்யப்பட ஜெபிப்போம்.

### *பரம நம்பிக்கை ஈந்த வாழ்வு!*

*ஜார்க்கண்ட், லால்மட்டியா பணித்தளம். கிறிஸ்துமஸ் தினத்தன்று நமது மிஷனெரிகளுக்கு சரிதா முர்மு என்ற விசுவாசியிடமிருந்து அவரது பெண் உறவினரொருவர் இறந்துவிட்டார் என்ற செய்தி தொலைபேசி மூலம் வந்தது. தொலைபேசியிலேயே அக்காரியத்திற்காக நமது மிஷனெரிகள் ஜெபித்தனர். பின்பு சற்று நேரத்தில் மீண்டும் தொலைபேசி மூலம், 'இறந்து விட்டார்' என்று கூறப்பட்டவருக்குள் சிறிது சுவாச உணர்வு இருப்பதாகவும், ஆனால் அவர் உயிர்பிழைக்க வாய்ப்பே இல்லை எனவும் அறிவிக்கப்பட்டது. எனவே, நமது மிஷனெரிகள் தங்களது கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளின் நிறைவிற்கு பின், உயிருக்குப் போராடும் அப்பெண்ணின் வீட்டிற்கு நேரில் சென்று, அவருக்காக நம்பிக்கையுடன் ஊக்கமாக ஜெபித்தனர். என்ன ஆச்சரியம்! அன்று காலை முதல் சுயநினைவில்லாது மரணித்தவர் போல படுத்திருந்தவர் இரவு 10 மணியளவில் சுயநினைவடைந்து பேச ஆரம்பித்ததோடு, மறுநாள் பரிபூரண சுகமடைந்தவராகவும் காணப்பட்டார். கர்த்தருக்கே புகழ்!*

## 11 பிப்ரவரி
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. பினெயகுமார் குரு

# பீஹார்

## கிஷான்கன்ஜ்:

**பாபு & லைசாம்மா**

**துதிக்க:** புதிதாக 19 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் தூவப்பட்டுள்ளன. புதிதாக ஒரு திருச்சபை நிறுவப்பட்டுள்ளது. மால்தா பணித்தளத்தைச் சேர்ந்த தனியோல் கிராம மக்கள் மத்தியில் தேவன் சுவிசேஷ வாசலைத் திறந்துத் தந்துள்ளார். இரு சக்கர வாகன விபத்தினின்று தேவன் நமது ஊழியர் மற்றும் சுதேச ஊழியரைப் பாதுகாத்தார். மால்தா பணித்தளத்தைச் சார்ந்த கிறிஸ்துவை அறியாத ஒரு கிராம வாசி மூலம் தேவன் நமது 2 விசுவாசி களை விஷமூட்டலினால் அடுத்தடுத்து உண்டாகக்கூடிய கொடிய மரணத்தி லிருந்து அதிசயமாகப் பாதுகாத்தார். ராணிகன்ஜ் பணித்தளத்தில் பணிபுரியும் நமது மிஷனெரிக்குத் தேவன் நல்ல புதிய வாடகை வீடொன்றை அமைத்துக் கொடுத்தார். பொலடிதங்கா, கேவத்தோலா, சின்கா, முருகதங்கா, மாத்ராபூர், பள்ளிகிராம், பெலியாபோகர், தஹாகோலா, தாஜ்பூர், மெடு, ஹோரி கிருஷ்ணாபூர், சோர்மிகானா மற்றும் நஃப்சந்தராபூர் ஆகிய பகுதிகளில் நடைபெறும் ஊழியப் பின்தொடர்பணிகளைத் தேவன் ஆசீர் வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கண்கோளாறினால் பார் வையை இழந்திருக்கும் சுபௌல் பகுதி யைச் சார்ந்த பிரணாவிற்கு அற்புத சுகம் கிடைக்க; மஸ்கான் பகுதியில் நடைபெறும் நமது ஊழியங்களின் மூலம் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொள்ள; ஹல்திபாரி பணித்தளத்தைச் சார்ந்த கொயாலிபாரி, தோயாமரி மற்றும் பிடோமாடி ஆகிய கிராமங்களில் வாழும் மக்களின் இரட்சிப்பிற்காக; ராணிகன்ஜ் பணித்தளத்தைச் சார்ந்த கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க முடியாதபடி இருக்கும் தடைகள் யாவும் நீங்க ஜெபிப்போம்.

# ஜார்க்கண்ட்

## அமரபாடா:

**எம். பென்ஹர் &
மேரி ஜான்சி ராணி**

**துதிக்க:** 31 நபர்கள் முதன்முறையாக இயேசுவின் அன்பை அறிந்து அவரை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருந்த இரண்டு குடும்பங்கள் தேவ கிருபையால் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். தும்பர்ஹட்டி கிராம ஆலயப்பிரதிஷ்டை யைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்ததற் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது இரவுநேர ஜெபக் கூடுகைகளின் மூலம் சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் யாவரும் இரட்சிக்கப்பட; 20 வருட திருமண வாழ்விற்கு பின், கர்ப்பந்தரித்துள்ள நமது சுதேச ஊழியர் டேனியல் முர்முவின் மனைவிக்குத் தேவன் பாதுகாப்பான சுகப்பிரசவம் நல்க; தால்தி கிராமத்தில் சுவிசேஷத்தை எதிர்ப்போர் மனந்திரும்ப; பாக்தடி கிராம ஆலய சீரமைப்புப்பணி எவ்விதப் பிரச்சனையுமின்றி கவனத்துடன் நன்கு நடைபெற ஜெபிப்போம்.

## 12 பிப்ரவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜீவரத்ன பீரோ, திரு. ரோஞ்ஜய் நர்சாரி
திரு. அருண்குமார் கே.

### படிட்டோலா:
**ஜீவன் ரஞ்சன் & ஸ்னிக்தா**

**துதிக்க:** புதிதாக 60 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் இணைந்துள்ளனர். இப்பணித்தள அளவில் நடத்தப்பட்ட முதற்கனி ஸ்தோத்திரப் பண்டிகை, சபை மூப்பர்கள் முகாம் மற்றும் வாலிபர் முகாம் யாவற்றையும் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்தார். லக்கிபூர் கிராம மார்ஷல் முர்மு, மஹாகமா மற்றும் ஸ்ரீதன் முர்மு ஆகியோருக்கு ஜெபத்தின் மூலம் அவர்களது தீராத பெலவீனங்களிலிருந்து கர்த்தர் விடுதலை தந்தார். ஜீத்பூர் மற்றும் லோயட்டோலா ஆகிய இரு பகுதி களிலிருந்தும் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கட்டியாரி மற்றும் பார மசியா ஆகிய கிராமங்களில் இருக்கும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; நமது ஊழியத்தில் வாலிபர்கள் உற்சாகமாக ஈடுபட; சந்தால் இன மக்களிடம் காணப்படும் சமுதாயத் தீமைகள் மற்றும் மூடப்பழக்கவழக் கங்கள் மறைந்துப்போக; பொது அரசாங்கத்தேர்விற்கு ஆயத்தப்படும் நமது விடுதிப்பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல கல்வி ஞானம் கொடுக்க; இனி வரும் நாட்களில் நடக்கவுள்ள நெற்பயிர் காணிக்கை பண்டிகை, சபை உறுப்பினரின் ஞாயிறு மற்றும் இரவுநேர சுவிசேஷக்கூட்டங்கள் போன்ற ஊழிய நிகழ்ச்சிகளைக் கர்த்தர் பெருமளவில் ஆசீர்வதித்துத் தர ஜெபிப்போம்.

### *அசாதாரண விசுவாசம்!*

*ஆந்திரப்பிரதேசம், ரோதம் பணித்தளம். நமது சானிபள்ளி கிராம புண்யவதி, தான் 9 மாத கர்ப்பமாகயிருக்கும் மாத்திரத்தில் திடீரென அதிக வயிற்றுவலியினால் அவதிப் பட்டார். அவரை அருகிலிருந்த பெனு கொண்டாவிலுள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மருத்துவப் பரிசோதனைக் குப்பின், கர்ப்பப்பையிலுள்ள சேயும் தாயும் உயிருக்கு ஆபத்தான நிலையி லுள்ளதை அறிந்த மருத்துவர், உடனே அவரை அனந்தபூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுமாறுக் கூறினார். அதன்படி அந்த அனந்தபூர் மருத்துவமனைக்கு அவர்கள் சென்ற போது, அங்கிருந்த மருத்துவர்கள் உடனே அவருக்கு அறுவை சிகிட்சை செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு செய்தாலும் தாயை மட்டுமே காப்பாற்ற இயலுமென்றும் கூறிவிட்டனர். இதனைக் கேட்ட நமது விசுவாசிகள் யாவரும் உடனே ஒன்றுக்கூடி, புண்யவதியின் வாழ்வில் கர்த்தர் ஓர் அதிசயத்தைச் செய்ய முடியும் என ஜெபத்தில் மன்றாடினர். கர்த்தர் அவர்களது அசாதாரணமான விசுவாசத்தைக் கனப்படுத்தும்வண்ணம் புண்யவதிக்கு அதிசய சுகப்பிரசவத்தைக் கட்டளையிட்டுத் தாயையும் சேயையும் நலமுடன் பாதுகாத்தார். கர்த்தருக்கே துதி!*

## 13 பிப்ரவரி
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்டெல்லா பிரபுதாஸ்
திரு. சஞ்சீப் குமார் ஆண்ட்ரப்
திருமதி. கம்புங் தாபா, செல்வி. வயலட் ஹன்ஸ்தா
திருமதி. குர்பிரீத் கௌர், திரு. பர்னபாஸ் சோரேன்

### பர்ஹர்வா :
**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** சமஸ்திபூர், பாலுகிராம், பெட்காசா, தும்ரியா, ஃப்ட்கிபூர், பாரம சியா, அடைடுக்கூர், ஷியாம்பூர், சண்டிபூர், ஜாம்பூர், போனிடங்கா, ராணி கிராம், மடோபாரா மற்றும் சிவபகாத் ஆகிய இடங்களில் பின்தொடர்பணி ஊழியத்தைச் சிறப்புடன் செய்ய தேவன் கிருபையளித்தார். பர்ஹய்ட், ஜால்திஹி, ரத்தன்பூர், ஜிக்தியா, புரஃபசர் காலனி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் சுவிசேஷத்தின் மீது விருப்பம் தெரிவிக்கின்றனர். தன்னார்வ ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பிற பயிற்சிக்கூட்டங்களில் கலந்துக்கொண்டோர் யாவருக்கும் அவைகள் ஊழியத்தில் ஈடுபட மிகுந்த பிரயோஜனமாக அமைந்தன. போனி டங்கா, கத்மா, பிஷான்பூர், பர்ஹய்ட் மற்றும் ஸ்ரீகுந்த் கௌமானி ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் சுவிசேஷத் தின் மீது அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். ஸ்ரீகுந்த் கௌமானி கிராமத்தைச் சார்ந்த நிர்மலா தேவி யைப் பித்தப்பை மற்றும் கல்லீரல் கோளாறிலிருந்தும், ஜால்தி ஹி கிராம ஆபிரகாம் ரவிதாஸை நீர்த்திரவக்கூழ் (Hydrosol) அறுவை சிகிட்சையிலிருந்தும் மற்றும் ஜுஹிபானா கிராம தாராமுனியைக் குடலிறக்கம் மற்றும் கர்ப்பப்பைக்கட்டி அறுவை சிகிட்சையிலிருந்தும் தேவன் பூரண சுகமடையச் செய்தார். ஸ்ரீகுந்த் கௌமானியைச் சார்ந்த நூறு வயதை எட்டிய நமது ஆரம்பக்கால விசுவாசி எலினாதாஸைக் கர்த்தர் பூமியில் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ்ந்து முடிக்கவும், ஏற்றவேளையில் அவர் கர்த்தருடைய இளைப்பாறுதலுக்குள் சமாதானத்துடன் பிரவேசிக்கவும் அருள்புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜுஹிபானா, ஸ்ரீகுந்த் கௌமானி, ராம்பூர் மற்றும் ஜிக்தியா ஆகிய கிராமங்களில் இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ள நமது புதிய தொடர்பாளர்கள் அனைவரும் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர; தாஸ் இன மக்கள் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்யத் தகுந்த தன்னார்வ ஊழியர் அல்லது சுதேச ஊழியர் கிடைக்க; பல்வேறு வியாதிகளினால் அவதிப்பட்டு வரும் நமது விசுவாசிகள் யாவரும் அற்புத சுகம் பெற; ஜால்திஹி பகுதியைச் சார்ந்த நமது விசுவாசி ஆபிரகாம் ரவிதாஸின் மகளுடைய 4-வது குழந்தைபேற்றில் காணப்படும் சிக்கல்கள் யாவும் மறைந்து அற்புதமான சுகப்பிரசவம் நேரிட; சமா தான நற்செய்தியை விடுதலையுடன் அறிவிக்க முடியாதபடி இருக்கும் தடைகள் யாவும் அகன்றுப்போக ஜெபிப்போம்.

## 14 பிப்ரவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லல் நுன் மவி மார் கிப்கென்
திருமதி. எஸ்தர் ராணி பீரோ

### கொட்டா: அகஸ்டின் பிஜி & மன்னா ராஜா வித்யா

**துதிக்க:** டப்ரா, கோபாலி, சாஜ்ஜோடி கொட்டா, அத்ரோ கொட்டா, பால்கமி, கிஸ்கண்டியாமு, ஜோலோ, தெலோ தோனி, தெதலி கொட்டா, மல்லிபோடா, சோட்டா சபடி, பாக்தாரி, படோதி மற்றும் தாவதாதி ஆகிய கிராமங்களில் விசுவாசத்தில் பின் மாற்றமடைந்திருந்த நமது விசுவாசிகளை மீண்டும் விசுவாசத்திற்குள் கொண்டு வர தேவன் நமது மிஷனெரிகளுக்குக் கிருபை பாராட்டினார். கொரோனா தொற்றுநோயி னிமித்தம் கடந்த அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் ஹரியானாவிலுள்ள ஒரு மையத்தில் தனிமைப்படுத்தபட்ட 15 வயது நிரம்பிய நமது விசுவாசி தேவ பகாடியாவின் மகள் சாம்பு மால்தோ 4 மாதங்களுக்குப் பிறகு தற்போது சுகமாய் வீடு வந்துச்சேர தேவன் அற்புத கிரியை நடப்பித்தார். நமது விசுவாசிகளுக்கு விவசாயத்தில் நல்விளைச்சலைத் தேவன் கட்டளையிட்டார். சபை மூப்பர்களின் மூலம் 3 கிராமங்களில் வேதப்பாட வகுப்புக்குழுக்கள் நன்கு நடத்தப்பட்டன. சூர்லா கிராம சுர்ஜாவிற்கு மனநோயிலிருந்து தேவன் சுகம் தந்த தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது விவசாய சந்தைப் பொருட்களை வாங்குவதில் மால்தோ ஆதி வாசிகளை அடிக்கடி ஏமாற்றி வியாபாரம் செய்யும் உள்ளூர் வியாபாரக்குழுக்களின் கைகளுக்கு அவர்கள் இன்னும் இரை யாகாதபடி இருக்கத்தக்கதாக நல்ல விழிப் புணர்வு பெற; அகோயா கிராம காபிரியேல், மித்திலேஷ் கிராம பப்லு மற்றும் லோகதம்பா கிராம ஜோயல் ஆகியோரது குடும்பங்களில் தேவ சமாதானம் நிலவ; நமது ஊழியம் நடைபெறும் அனைத்து கிராமங்களிலும் பெண்களுக்கான ஜெபக்குழுக்கள் ஆரம் பிக்கப்பட; கிஸ்கண்டியாமு கிராமத்தைச் சேர்ந்த இஸ்ரேல் என்பவருடைய குடும் பத்தில் காணப்படும் பிரச்சனை சுமூக மானத் தீர்வுக்கு வர; சிம்பி மற்றும் மூடி ஆகிய கிராமங்களில் வாழும் மக்களின் ஆத்தும மீட்பிற்காக; கதாட்கொட்டா, சிக்டு, அம்தா மற்றும் இலுக்குருபிலா ஆகிய கிராமங்களில் விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்திருப்போர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; வலிப்புநோய், மலேரியா, காசநோய் மற்றும் மூளை மலேரியா ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் யாவரும் முற்றிலுமாய் குணமடைய ஜெபிப்போம்.

### புயன் ஊழியம்:
### ஜேக்கப் ஞானப்பண்டிதன் & சாந்தி

**துதிக்க:** 2 கிராமங்களில் இரவுநேர ஜெபக்கூட்டங்களையும், புதிதாக 8 கிரா மங்களில் வெளிசந்திப்பு ஊழியங்களை யும், 6 இடங்களில் இயேசு திரைப்பட ஊழியங்களையும் மற்றும் 14 கிராமங்களில் ஊழியப் பின்தொடர்பணிகளையும் செய்து முடித்திட தேவன் நமது ஊழியர்களுக்கு இரக்கம் பாராட்டினார். இருசக்கர வாகன விபத்தினின்று தேவன் நமது சுதேச ஊழியர் ரமேஷின் குடும்பத்தைப் பாதுகாத்ததற் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக நமது ஊழியத்தில் தொடர்பு கொண்டிருக்கும் சந்தோஷ் ராய், கின்னு ராய், சாரதிதேவி, பெஜ்னாத் ராய் மற்றும் தினு ராய் ஆகியோர் இயேசுகிறிஸ்துவைத் தங்களது இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வெளிசந்திப்பு ஊழியத்தில் காட்டப்படும் இயேசு திரைப்பட ஊழியத்திற்கான உபகரணத்தேவைகள் யாவும் சந்திக்கப்பட; சூன்யாதேவியின் கணவர் இரட்சிப்படைய ஜெபிப்போம்.

## 15 பிப்ரவரி
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேனியல் தாமஸ்
திருமதி. மெர்சி தெபோரா செந்தில்
திரு. வசாவா எலேஷ் பிரபு, திரு. அய்யனார் எம்.

### மண்ட்ரோ:
### மிர்ஜியோ கிஸ்கு & செலினா ஹன்ஸ்தக்

**துதிக்க:** புதிதாக 18 நபர்கள் கிறிஸ்து வண்டை வந்துள்ளனர். புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப் பட்டுள்ளது. சிம்ப்ரா கிராம ஹெலினா ஹன்ஸ்தாவை மூளை மலேரியாவி லிருந்தும், குஸ்பா கிராம மரியம் முர்மு, காலாஜார் கிராம தெரசா முர்மு மற்றும் டப்ரா கிராம மார்ட்டினா சோரேன் ஆகியோரைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், தும்ரியா கிராம தீமோத்தி முர்முவைப் பக்கவாதத்திலிருந்தும் தேவன் சுகப்படுத்தி யதற்காகத் துதிப்போம். முக்கியமான சபை மூப்பர்கள் யாவரும் ஜாக்ரா திருச்சபையில் கூடி, கர்த்தருக்கு உற்சாகமாய் காணிக்கை செலுத்துவதைக் குறித்து வேதாகமத்தி லிருந்து கற்றறிந்துக் கொள்ள தேவன் நல்வாய்ப்பு பாராட்டினார். சர்னி கிராமத்தி லிருந்து 2 குடும்பங்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையைப் பெற்றுக் கொள்ள தேவன் கிருபை செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜாக்ரா திருச்சபையைச் சார்ந்த சபை மூப்பர் பீட்டர் ஹெம்ரோ, ராஜ்குமார் மிர்தா மற்றும் சபைக்கமிட்டி மக்கள் யாவரும் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் நாளுக்குநாள் வளர; சபா குருவாக இருக்கும் ஜய்மன் மராண்டியின் இரட்சிப்பிற்காக; சிம்ப்ரா திருச்சபை மூப்பரான சுரேஷ் ஹன்ஸ்தாவும், ஜோகன் டுடுவும் திருச்சபை ஆராதனை நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்த; திருச்சபையில் இணையக் காத்திருக்கும் மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சிர்சா மற்றும் ஹாக்ரா ஆகிய கிராமங் களில் சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் கிறிஸ்துவை ஆழமாய் அறிகிற சிந்தைக் குள் வளர; சிம்ப்ரா, கோர்வா மற்றும் காய்ரா ஆகிய திருச்சபைகளின் மக்கள் ஆலய ஆராதனைகளில் தொடர்ந்து பங்குப்பெற ஜெபிப்போம்.

### *கிறிஸ்துவே, எனது ஜீவன்!*

*ஆந்திரப்பிதேசம், அனந்தபூர் பணித்தளம், ஜெதரஹள்ளி கிராம நமது தீவிர சபை மூப்பரான இம்மானுவேல், அடிப்படை ஸ்தானத்தில் தான் ஒரு சரக்கு வண்டி ஓட்டுனராக அடிக்கடி பெங்களூருக்குத் தனது பணியினிமித்தம் வண்டியில் சென்று வந்தார். அத்தருணத்தில் கொரோனா தொற்றுநோயினால் இவர் அதிகம் பாதிக்கப்பட்டுத் தனிமையாக 20 நாட்கள் வேதனைப்பட்டார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சில நாட்களுக்குள்ளாக மருத்துவரும் இவரைக் கைவிட்டு விட்டார். ஆயினும், நமது விசுவாசிகள் அனைவரும் இவருக்காக ஜெபித்ததுடன், இவரையும் இவரது குடும்பத்தினரையும் தொலைபேசி மூலம் ஆறுதல்படுத்தினர். அப்போது இம்மானுவேல், "நான் பிழைத்தாலும் மரித்தாலும் இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன். அவரே எனக்கு ஜீவன்!" எனக் கூறினார். இவ்விசுவாச அறிக்கையைக் கேட்ட நமது பரலோகப்பிதா, அவருடைய அதிசய தயவினாலும் இரக்கத்தினாலும் இவரைத் தொட்டுச் சுகப்படுத்தினார். தற்போது இவரது உடல்நிலை நன்குத் தேறிவருகிறது. கிறிஸ்துவுக்கே மகிமை!*

**16 பிப்ரவரி**
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பொன்லதா ஜெபக்குமார்
திரு. சதீஷ் குமார்

## புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளி, பந்தேனி :

### விக்டர் ஜெயசீலன் & நகோமி

**துதிக்க:** கல்லீரலைப் பாதிக்கும் தொற்று நோய்த் தடுப்பிற்கான சிகிட்சையை RIMS–ராஞ்சியில் நல்ல முறையில் முடித்து வர தேவன் ரோஷினி மால்தோ, பிங்கி மற்றும் ரோஹித் ஆகியோருக்கு உதவி செய்தார். ஹிந்தி மொழிக்கான நமது ஆசிரியர் தர்மா மால்தோவைத் தேவன் சரீர பெலவீனத்தி னின்று சுகப்படுத்தினார். ரீஸ் மால்தோ, ஜாண் மால்தோ மற்றும் மார்கஸ் மால்தோ ஆகியோருக்கு நிகழ்நிலை (Online) வழி மூலம் B.Com., பட்டப்படிப்பிற்கான தேர்வை நமது பந்தேனி வளாகத்தில் வைத்து நல்லமுறையில் எழுதி முடிக்கக் கர்த்தர் உதவிப்பாராட்டினார். ஜார்க்கண்டில் நடைபெற்ற துணை மருத்துவக்கல்விக்கான நுழைவுத்தேர்வைச் செலத்தியேல் மால்தோ விற்கு சிறந்தமுறையில் எழுதக் கர்த்தர் கிருபை செய்தார். ஒராவன் கிராமங்களான ஷாரி சக்லா மற்றும் மசூரியா ஆகிய இடங்களில் எழுப்புதல் கூட்டம் மற்றும் ஞாயிறு ஆராதனைகளை நடத்தி முடிக்க நமது பந்தேனி மிஷனெரிகளுக்குக் கர்த்தர் தயவு பாராட்டினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** செலத்தியேல் மால்தோவிற்கு துணை மருத்துவக் கல்வியைக் கற்ப தற்கு ஏற்ற நல்ல வாய்ப்புகள் கிடைக்க; தனது B.A., பட்ட மளிப்பு விழாவிற்கு பின் IAS அதிகாரி யாக மாற விரும்பும் காபிரியேல் மால்தோ விற்குத் தேவன் உயர்கல்விக்கான வாசல் களைத் திறந்துத் தர; அதாரா கிராம மக்களுக்குச் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் வர; தேடுவோர் முகாமில் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் குறித்து கேள்விப்பட்டிருப்போரின் இரட்சிப்பிற்காக; வளாக சுற்றுச்சுவர் கட்டுமானப்பணி தடையின்றி நடைபெற; பக்கத்து கிராம மக்களும் இயேசுவைக் குறித்தும் அவரது வல்லமையான வார்த்தைகளைக் குறித்தும் கேள்விப்பட; குடிப்பழக்கத்திற்கு அடிமை யாகயிருக்கும் நமது விசுவாசிகள் முற்றிலு மாய் அதிலிருந்து விடுதலை பெற; CBSE கல்விக்கான அரசாங்க அனுமதி இப்பள்ளிக் குக் கிடைக்க; நமது பந்தேனி வளாகத்தில் பணிபுரியும் அம்மாநில பணியாளர்களுக்கு அடிப்படைத்தேவையுடன் கூடிய நல்ல வீடுகள் தங்குவதற்குக் கிடைக்க ஜெபிப்போம்.

## *யார் இதைச் செய்தது?*

*ஜார்க்கண்ட், மண்ட்ரோ பணித்தளத்தில் நமது சபை மூப்பர் பவுலோஸ் சோரேன் என்பவர் ஒரு ஏழை விசுவாசி. இவர் தனது குடும்பத்தினருடன் ஆலய ஆராதனைக்குத் தவறாமல் சென்று வருவார். இவரது மகன் மனுவேல் சோரேன் 10–ம் வகுப்பில் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றிருந்தான். அவன் 11–ம் வகுப்புப் படிக்க மிகவும் ஆர்வ மாயிருந்தான். ஆனால் 11–ம் வகுப்பில் சேர பணமில்லை. இதற்கிடையில் சபையில் VBS ஆசிரியர்களுக்கான பயிற்சி நடத்தப்பட்டது. இவனும் ஜெபத்துடனும், மனபாரத்துடனும் அப்பயிற்சியில் பங்குப்பெற்றான். பின்பு பயிற்சி நிறைவிற்குபின், அவன் தனது வீடு திரும்பியபோது, அவனது வங்கிக்கணக்கில் ரூ.6000/– இடப்பட்டிருந்தது. என்ன ஆச்சரியம்! அப்பணம் யாரிடமிருந்து எப்படி வந்ததென்று இந்நாள் வரையும் அவர்களுக்குத் தெரியாது. பின்னர், அப்பணத்தைக் கொண்டு கர்த்தருக்கு நன்றி செலுத்தி, 11–ம் வகுப்புக் கல்வியைத் தொடர பள்ளியில் சேர்ந்தான். கர்த்தருக்கே மகிமை!*

**17 பிப்ரவரி**

**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ருஹாமா குரு

செல்வி. வன்கலபுடி சாந்தினி

## சந்தால் வளர்ச்சிப் பிராந்தியம், சிறுவர் பராமரிப்பு & பகையா சிறுவர் விடுதி:

**பீட்டர் பிரபாகரன் & விமலா**

**துதிக்க:** அநேக நாள் பிரயாசத்திற்கு பின், சீஷத்துவத்தைக் குறித்ததான புத்தகம் அச்சிட்டு முடிக்கக் கர்த்தர் கிருபை கூர்ந்தார். நமது FMPB காலண்டர் சந்தால் மொழியில் அச்சிடப்படவும், ஏற்ற சமயத்திற்குள் அவையாவும் எல்லாத் திருச்சபைகளையும் சென்றடையவும் தேவன் ஒத்தாசை நல்கினார். 6 VBS பாடல்களைச் சந்தால் மொழியில் ஒலி, ஒளியுடன் கூடிய காட்சிப்பாடல்களாகப் படம் பிடிக்கக் கர்த்தர் உதவிப்புரிந்தார். Zoom Call வசதி மூலம் வாரத்திற்கு 2 முறை விடுதிப்பணியாளர்களுடன் இணைந்து ஜெபிக்கவும், அநேக தேவ பிள்ளைகள் தேவ செய்தியையும் ஜெபத்தையும் அவர்களுடன் பகரவும் தேவன் நல் வாய்ப்பை அருளுகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விடுதியில் தங்கி, கிரமமாக 10-ம் வகுப்புப்பாடங்களைப் படித்து வரும் மாணவ, மாணவிகளின் பாதுகாப்பிற்காக; நமது விடுதியில் பணிபுரிவதற்குத் தேவையான ஆட்களும், சமையல் பணிக்குத் தேவையான ஆட்களும் கிடைக்க; பகையா சிறுவர் விடுதிக்கான 4 சக்கர வாகனங்கள் கிடைக்க; சாந்தனா விடுதியின் நிலப்பிரச்சனை வழக்கில் நல்லத் தீர்வு கிடைக்க; நமது விசுவாசி பூர்மி மராண்டியின் குடும்பத்திற்கு மழலை பாக்கியம் கிடைக்க; குஷ்பானா, ஜாம்கந்தர், நோனிகட், லிட்டிபாரா மற்றும் மண்ட்ரோ ஆகிய இடங்களில் அமைந் துள்ள சிறுவர் பராமரிப்பு மையங்கள் யாவும் இத்தொற்றுநோய் பரவல் நாட்களில் சரியான விதங்களில் பராமரிக்கப்பட; இம்மையங்களில் நடைபெறும் சமைய லறை மற்றும் சாந்தனா விடுதியின் மேற்கூரை சீரமைப்புப்பணிகள் யாவும் சிறப்பாக நடந்து முடிய ஜெபிப்போம்.

## *கர்த்தரின் மா கிருபை!*

*மகாராஷ்டிரா, டெக்கான் பணித்தளம். இங்கே கிறிஸ்துமஸ் பண்டிகையின் காலக்கட்டம் துவங்கியபோது, சுவிசேஷ எதிர்ப்பாளர்களும் தங்களுக்குள்ளே கூட்டங்கள் கூட்டி, பல திட்டங்களைத் தீட்டினர். எனவே, நமது விசுவாசிகள் மத்தியிலே பிரத்தியட்சமாக 3 நாட்கள் உபவாச ஜெபங்கள் ஒழுங்குச் செய்யப்பட்டு, ஆங்காங்கே நடைபெற்றன. கர்த்தர் அந்த ஜெபங்களைக் கேட்டு, எதிர்ப் பாளர்களின் திட்டங்களை ஒன்றுமில்லாமல் போகப் பண்ணினார். நடந்தது என்ன! 40 இடங்களில் இம்முறை கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சிகளும் ஆராதனைகளும் நடத்தப்பட்டன. இதில் இயேசுவைப்பற்றி அறியாத பிறநம்பிக்கைக் கொண்ட அநேக ஜனங்கள் வந்து கலந்துக்கொண்டனர். கர்த்தருடைய மகா பெரிய கிருபையினால் புதிதாக 73 நபர்கள் தங்களது விசுவாசத்தை முதன்முறையாகக் கிறிஸ்துவில் அறிக்கை யிட்டுள்ளனர். குறிப்பாக, நமது அடிலாபாத் பணித்தள மாந்தவி விசுவாசிகள் இணைந்து, தங்களது முதல் கிறிஸ்துமஸ் பண்டிகையைச் சிறப்பாக ஆசரிக்கக் கர்த்தர் கிருபை காட்டியதோடு, புதிதாக 21 நபர்களையும் இவ்விசுவாசிகளோடு தமது மந்தையில் இணைத்துள்ளார். அல்லேலூயா!*

## 18 பிப்ரவரி
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. தேஜஸ்விட்டா பெபர்த்தா
திரு. சுகின்லால் சி.

# மேற்கு வங்காளம்

### பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவின் அன்பிற்குள் அடைக்கலம் புகுந்துள்ளார். புதிதாக 11 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. பன்னாபூர் கிராமத்தில் நடந்த அனைத்து இரவுநேர ஜெபக்கூட்டங்களையும், சபை மூப்பர் கூடுகையையும், அறுவடைப்பண்டிகை ஆராதனையையும், வீடு சந்திப்பு ஜெபக்கூட்டங்களையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். முத்ருதங்கா, தாமூர், தலிதோலா, கியோல் மற்றும் சிம்ப்ரா ஆகிய கிராமங்களில் நடந்த சுவிசேஷக் கூடுகைகளின் மூலமும், முத்ருதங்கா மற்றும் பன்னாபூர் ஆகிய இரு கிராமங்களில் நடந்த இயேசு திரைப்பட ஊழியங்களின் மூலமும், ரஞ்சின் தோலா, பியாஸ்குந்தி, ரோகினி தோலா, கேசியாபாரா, சோஹர்பூர் மற்றும் சுன்னகந்தூர் ஆகிய கிராமங்களில் நடந்த தனித்தாள் ஊழியம் மூலமும் அநேகர் இயேசுவின் அன்பைக் குறித்து கேட்டும் பார்த்தும் அறிந்துள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது கண்களில் தவிடுத்தூசி விழுந்ததினால் உண்டான மிகுந்த வலியினால் அல்லல்படும் சோனேஷ் முர்முவின் சுகத்திற்காக; சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் சோர்பூர் கிராம சூர்யா முர்மு, பூல் முர்மு மற்றும் குலதங்கா கிராம பிஸ்வநாத் சோரேன், லுக்கி ஹஸ்தா, திலீப் சோரேன், துரன் மார்தி மற்றும் கியோல் கிராம காபு ஹஸ்தா, குப்பி டுடு, ஜாஸ்மின் ஹஸ்தா, ரோஜன் மராண்டி மற்றும் சிவபஸ்கி ஆகியோரின் இரட்சிப்பிற்காக; நமது விசுவாசி மாமுனி முர்முவிற்குச் சுகப்பிரசவம் நேரிட; வாலிப தன்னார்வ ஊழியர்களான சல்போனா கிராம அனாமிகா டுடு, லலிதா மார்தி மற்றும் முத்ருதங்கா கிராம மரியம் டுடு, அஸ்தா முனி சோரேன் மற்றும் பன்னாபூர் கிராம காந்தினி ஹஸ்தா மற்றும் நிதான்பூர் கிராம ராபி டுடு, அர்ச்சனா டுடு மற்றும் உத்தர் கர்மா கிராம பாலி முர்மு ஆகியோரின் நல் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சல்போனா, குலதங்கா, முத்ருதங்கா, பன்னாபூர் மற்றும் உத்தர் கர்மா ஆகிய கிராமங்களில் பெரும் ஆவிக்குரிய எழுச்சி மக்கள் மத்தியில் உருவாக ஜெபிப்போம்.

### ஜியாகன்ஜ்:
### எம். ஜாண் & செலினா ஜாய்ஸ்

**துதிக்க:** பொலஜிதங்கா, மாத்ராபூர், சின்கா, குல்பாடியா மற்றும் கேவத் தோலா ஆகிய கிராமங்களில் நடைபெற்ற பின்தொடர்பணி ஊழியங்களையும், ஜியாகன்ஜ் பஜார் பகுதியில் நடந்த வெளிசந்திப்பு ஊழியங்களையும் தேவன் அநேகருக்கு ஆசீர்வாதமாக்கித் தந்தார். வட இந்திய திருச்சபை வட்டாரத்திற்குள் நடைபெற்ற ஒரு சிறிய மேளாவில் நமது சுவிசேஷப் பிரதிகளை மக்களிடம் விநியோகிக்க தேவன் உதவிச்செய்தார். மற்றும் மொத்தத்தில் இம்மாதம் ஏறத்தாழ 4000 எண்ணிக்கை அளவிலான கைப்பிரதிகளை மக்களுக்குக் கொடுக்க கர்த்தர் அநுக்கிரகம் அருளினார். கேவத் தோலா கிராம நமது புதிய தொடர்பாளர் சிபு மால் தோவின் காலில் வந்திருக்கும் கட்டியிலிருந்து தேவன் அவருக்கு நல்ல சுகம் கொடுத்து வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும் நாட்களில் நடக்கவுள்ள ஆவிக்குரிய கூட்டங்களுக்காக; சுவிசேஷ கைப்பிரதிகளைப் பெற்றிருப்போரும், சத்திய வசனத்தைக் கேட்டிருப்போரும் கிறிஸ்துவின் அன்பைச் சொந்தமாக ருசிக்க; முர்ஷிதாபாத் மற்றும் நடியா ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வரும் நமது ஊழியங்களின் வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## 19 பிப்ரவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. அன்புமலர் பாலமுருகன்

# அஸோம்

## லக்கிம்பூர்:

### சி. ஹெச். ஜாண் & வேணி

**துதிக்க:** இம்முறை யானைகளின் நடமாட்டம் குறைந்திருந்ததினால், வெளிசந்திப்பு ஊழியங்களில் நமது விசுவாசிகள் பயமில்லாமல் கலந்துக் கொண்டனர். காலச்சூழ்நிலை ஊழியத்திற்கு அதிக இடைஞ்சல்களாய் இருந்தபோதிலும், நமது ஊழியர்கள் அனைத்து ஊழிய நிகழ்ச்சிகளையும் வெற்றியாகச் செய்து முடிக்கக் கர்த்தர் கிருபை புரிந்தார். ஜோனை பணித்தளத்தில் வைத்து நடைபெற்ற 3 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகையில் புதுல் என்பவரின் மகனுக்குப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்தும், மோகு பெகுவிற்கு மூலப் பிரச்சனையிலிருந்தும் மற்றும் மஜினிக்குக் காசநோயிலிருந்தும் தேவன் சுகம் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாந்திரீகப் பழக்கத்திலுள்ள கக்கோ தோலே, ஜோர்நாத், புதுல், பாபுல், ஜெனா, உபல் தோலே ஆகியோரின் இரட்சிப்பிற்காக; திருச்சபையில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டு இணைந்திருக்கும் தனுஷ், சிங்ஹன் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; பின்மாற்றமடைந்திருக்கும் தெப்ரஜன் தோலே, லெக்கிசன் பெகு, புலுமாய் பெகு, ராஜு, ரிம்பி, மிலான் ஜோதி, ஆபேல், மெஜான் மேதாக் மற்றும் மோகன் தோலே ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; பிரகாந்தோ, ராஜா குட்டும் மற்றும் கேசவ் குட்டும் ஆகியோரின் மனமாற்றத்திற்காக; சொக்கலா மற்றும் கொஷு தோலே ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் யாவும் விரைவில் நிறைவுப்பெற ஜெபிப்போம்.

# சத்தீஸ்கட்

## பத்தல்காவ்:

### பாலமுருகன் & அன்புமலர்

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். 6 கிராமங்களில் முதன் முறையாகச் சுவிசேஷம் உரைக்கப் பட்டுள்ளது. 3 கிராமங்களில் புதிதாக பஜன் கூடுகைகள் தொடங்கப்பட்டுள்ளன. 6 கிராமங்களில் நடந்த வெளிசந்திப்புக் கூடுகைகளின் மூலம் அநேகர் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கக் கர்த்தர் உதவிச் செய்துள்ளார். தாதா நகரில் நடைபெறும் ஞாயிறு ஆராதனையில் 2 குடும்பங்கள் புதிதாகப் பங்குப்பெறுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** செனாமா திருச்சபையைச் சார்ந்த நமது இரு விசுவாசிகளில் ஒருவர் மனநோயிலிருந்தும், மற்றொருவர் புற்றுநோயிலிருந்தும் அற்புதசுகம் பெற; நமது சுதேச ஊழியரின் மகனான ஆர்யன் எக்காவை மூளைக்காய்ச்சலிலிருந்தும், அவரது மனைவியை அடிக்கடி வரும் மயக்கத்திலிருந்தும் தேவன் முற்றிலுமாய்க் குணப்படுத்த ஜெபிப்போம்.

## 20 பிப்ரவரி
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. குண சந்திர பயக்

திரு. ஜாண்சன் வி.

### லுடேக்: டேவிட் மசிஹ் & நிஷா

**துதிக்க:** முதன்முறையாக இயேசுவின் நற்செய்தியைக் கேட்டு, ஒரு நபர் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளார். புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பணித்தள அளவில் நடத்தப்பட்ட கலாச்சார நிகழ்ச்சிகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புல்திகா மற்றும் காம்காரா ஆகிய கிராமங்களில் நமது ஆலய ஆராதனைகள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

### அம்பிகாபூர் & லக்கன்பூர்:
**அருண் குமார் & சாரதி**

**துதிக்க:** பத்தேபூர் பகுதியில் ஒரே ஒரு நபர் கிறிஸ்துவின் அன்பை ருசித்துள்ளார். கடந்த 25 வருடங்களாகச் சிறுநீரகக்கல் பிரச்சனையினால் கண்ணீர் வடித்து வந்த நமது சுதேச ஊழியர் நொஹர்சாயிற்குத் தேவன் தந்த அற்புத சுகத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஆலய ஆராதனைகளில் தொடர்ச்சியாகக் கலந்துக் கொள்ளும் ஏழு குடும்பத்தினர்களின் இரட்சிப்பிற்காக; வலிப்பு நோயிலிருந்து நமது விசுவாசி ஜகேஷ்வர் எக்காவைத் தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

### ராஜ்பூர்:
**வால்வி தினா தானா & ஷைலா**

**துதிக்க:** தீய ஆவியின் பிடியிலிருந்து பிராமுனியைத் தேவன் விடுவித்தார். புதிதாக 10 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்தை விட முடியாமல் கஷ்டப்படும் நமது விசுவாசிகளான அனில், நிக்கோலஸ், மகேந்திரா மற்றும் ஓம் பிரகாஷ் ஆகியோருக்காக; புதிதாக லுத்ரா கிராமத்திலிருந்து நமது ஆராதனைகளில் ஒழுங்காகப் பங்குப்பெறும் 3 குடும்பங்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

### வாட்ராஃப் நகர்:
**பூபதி & பாலின் மேரி**

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது; அதில் லமோரி மற்றும் மிதலாபூர் ஆகிய கிராமங்களில் புதிதாக இயேசுவின் நற்செய்தி கூறப்பட்டுள்ளது. இங்கே 6 கிராமங்களில் எவ்வித இடைஞ்சலுமின்றி ஆராதனை நடந்துக்கொண்டிருக்கிறதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது அனைத்து விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; திருச்சபையில் இணையக் காத்திருக்கும் 25 நபர்களின் விசுவாச வாழ்விற்காக ஜெபிப்போம்.

## 21 பிப்ரவரி

ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. திலக் எஸ்.

### பையாதன்:

### முத்துக்குமார் & நேத்ரவதி

**துதிக்க:** பல்மா மற்றும் கரோட்டி ஆகிய கிராமங்களில் கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தி அறிவிக்கப்படவும், அநேகர் அதற்குச் செவிசாய்க்கவும் தேவன் அநுக்கிரகம் ஈந்தார். இங்குள்ள விசுவாசிகள் கர்த்தருடைய பணிக்கென தங்களது காணிக்கைகளைத் தியாகமனதுடன் உதாரத்துவமாகக் கொடுக்கத் துவங்கியுள்ளதால், கர்த்தர் அவர்களைப் பலவிதங்களில் மேன்மையாக ஆசீர்வதித்து வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஷிர்கி, கோட்பா ஆகிய கிராமங்களில் இருந்து நமக்குக் கிடைத்திருக்கும் புதிய தொடர்பாளர்கள் யாவரும் கிறிஸ்துவைத் தங்களது மீட்பராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ள; ஷிர்கி, கோட்பா மற்றும் கேவ்ரா ஆகிய கிராமங்களில் ஆராதனைகள் தொடர்ச்சியாக நடைபெற; கோண்ட் இன மக்களிடையே சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களான பார்சி கிராம தஷ்வர்சிங் மற்றும் பாசபுரா கிராம ஜுத்ராய் மற்றும் நந்தலால் ஆகியோரது ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### பாலி: ராபின்சன் ஹஸ்தக் & ஜான்சி

**துதிக்க:** இரு சக்கர வாகன விபத்தின் மூலம் நமது ஊழியர் திரு. ராபின்சன் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தோள்பட்டை எலும்பு முறிவிலிருந்தும், அவரது மகன் ஆன்ட்ரூவிற்குக் கணுக்கால் மற்றும் மணிக்கட்டு ஆகிய பகுதிகளில் உண்டாகியிருக்கும் தசை முறிவிலிருந்தும் தேவன் அவர்களை இம்மட்டும் காப்பாற்றி, இருவரின் ஜீவனையும் பாதுகாத்துத் தந்துள்ளார். தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுத் திருச்சபையில் இணைய ஆயத்தமாக இருக்கும் 12 நபர்களுக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வருகிற நாட்களில் நடக்கவுள்ள வெளிசந்திப்பு ஊழியங்கள் மற்றும் பின்தொடர்பணி ஊழியங்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட; புலம் பெயர்ந்துச் சென்றுள்ள விசுவாசிகளின் நற்சாட்சியுள்ள வாழ்விற்காக; நமது விசுவாசிகளான தரம்சந்த், அஜய், கணேஷ் ராம் மற்றும் மனோஜ் ஆகியோருக்குத் தகுந்த வேலை வாய்ப்புகள் கிடைக்க; அமர்பூர், பகன்தா மற்றும் கோண்ட் காஞ்சன்பூர் ஆகிய பகுதிகளில் புதிய ஆராதனைக்குழுக்கள் தொடங்கப்பட; குடியா கிராமத்தில் ஆலயம் கட்ட இருக்கும் நிலத்திற்கான அடிப்படை நிலப்பதிவுக் காரியங்கள் துரிதமாக நடைபெற ஜெபிப்போம்.

### *தேவனால் திறக்கக் கூடாத காரியம் ஒன்று உண்டோ!*

*உத்தரப்பிரதேசம், சிக்கந்த்ரா பணித்தளம், கட்டியார் என்ற உயர் ஜாதி பணக்கார வர்க்க மக்கள் மத்தியில் நமது ஊழியர்கள் சுவிசேஷத்தைப் பறைசாற்றினர். இந்த ஜாதி மக்கள் கான்பூர் மாவட்டத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசித்து வருகிறார்கள். இவர்களில் ஒரு சிலர் மட்டுமே விசுவாசிகளாக மாறி, நசீர்பூர் மற்றும் மதன்பூர் ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வருகிறார்கள். இம்முறை இஜ்ஜாதி மக்களிடையே நமது மிஷனெரிகள் பறைசாற்றிய சுவிசேஷத்தின் மூலம், திரளான மக்களுடைய இதயங்களைத் தேவன் திறந்துத்தந்தார். ஆம், அவரால் திறக்கக் கூடாத காரியமும் ஒன்றுமில்லையே! அல்லேலூயா!*

## 22 பிப்ரவரி
திங்கள்

# குஜராத்

### தராம்பூர் & கெர்காம்:
**விக்னேஷ்வரன் & ஏஞ்சலின்**

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளதோடு, முதன் முறையாக 4 கிராமங்களில் சுவிசேஷமும் அறிவிக்கப்பட்டுள்ளது. சாதர்வேதா கிராம மீராபேனைத் தேவன் தீராத பெலவீனத்தினின்று பாதுகாத்தார். குந்தியா கிராம ராதேஷ்பாயிற்குத் தேவன் குழந்தை செல்வத்தைக் கட்டளையிட்டார். கெட்ட ஆவியின் பிடியிலிருந்து தேவன் மானி கிராம ஜெய்லால்பாயை விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கெர்காம் கிராமத்தைச் சுற்றிலும் வசிக்கும் தோடியா பட்டேல் இன மக்களின் இரட்சிப்பிற்காக; பீட்டா, வக்தார்தா மற்றும் போபி ஆகிய கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக்கட்டுமானப் பணிகள் யாவும் விரைவில் நடந்தேறி முடிய; நமது கெர்காம் சிறுவர் விடுதியில் தங்கியிருந்து கல்விப்பயிலும் 10-ம் மற்றும் 12-ம் வகுப்புகளுக்கான அரசாங்க பொதுத்தேர்விற்கு நிகழ்நிலை வழி மூலம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் மாணாக்கர்களுக்காக ஜெபிப்போம்.

### நஸ்வாடி & டபோயி:
**யுவனேஷ் & ஜான்சி ராணி**

**துதிக்க:** புதிதாக 84 நபர்களுக்கு சுவிசேஷம் கடந்துச் செல்லவும், 19 புதிய ஏற்பாடுகளும், 24 வேதாகமப் பிரதிகளும் விநியோகிக்கப்படவும் கர்த்தர் கிருபை காட்டினார். 8 இடங்களில் நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூட்டங்களையும், சபை மூப்பர்களின் கூடுகைகளையும், திட்டக் கூடுகைகளையும் தேவன் எவ்விதப் பிரச்சனையுமின்றி நடத்தித் தந்தார். நமது விசுவாசிகளுக்குத் தங்களது விவசாயத்தொழிலில் நல்ல அறுவடையைத் தேவன் கட்டளையிட்டார். டுங்ரா பீல் மக்கள் மத்தியில் கொரோனா தொற்றுநோயின் பாதிப்பில்லாதபடி தேவன் அவர்களை வேலியடைத்துப் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டுங்ரா பீல் இன மக்களிடையே நடைபெற்ற ஊழிய வளர்ச்சிப்பணிகளைத் தேவன் ஆசீர்வதிக்க; டுங்ரா பீல் மக்களின் விசுவாசிகள் மத்தியில் ஒற்றுமை காணப்பட; சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் மனம் மாற; தற்கொலை எண்ணத்தைத் தூண்டும் தீய ஆவி டுங்ரா பீல் மக்கள் மத்தியிலிருந்து விலகி ஓட ஜெபிப்போம்.

### சூரத்: மாதவராய் & ஜெபதங்கம்

**துதிக்க:** ஹவுசிங் போர்டு பகுதியிலிருந்து புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. இப்பகுதியிலிருந்து நமது ஆராதனைகளில் புதிதாக 15 நபர்கள் கிரமமாகப் பங்குப்பெறுகின்றனர். தீராத வியாதிகளிலிருந்து ஆஷாபேனின் குடும்பத்தைத் தேவன் சுகப்படுத்தினார். 6 இரவுநேர ஜெபக்கூடுகைகளையும் மற்றும் பெண்கள் கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சித்தார்த்தன் நகரில் புதிதாக நடத்தத் தீர்மானித்திருக்கும் கூட்டங்களைத் தேவன் கனப்படுத்த; மாயஜால மந்திரங்களுக்கு அடிமையாக வாழும் சுனிதாபேனின் மனமாற்றத்திற்காக; இங்கே ஆலயம் கட்டுவதற்கான அரசாங்க அனுமதி கிடைக்க; இளம் விசுவாசிகள் மற்றும் வேதாகமப்பள்ளி சிறுவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## 23 பிப்ரவரி
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஐசக் ராஜா டி., திருமதி. ஈமண்டி அனுராதா
திரு. செந்தில் குமார் தீமோத்தேயு
திருமதி. அனிதா பிரபா விக்டோரியா
திருமதி. ஷைனி சிநேகா வர்ஹீஸ்

### சொரம்பா: ரமேஷ் கிறிஸ்டியன் & ரேச்சல் ரமேஷ்

**துதிக்க:** ரெந்தா தேவ்காத் மற்றும் வாகர் ஆகிய கிராமங்களில் நடந்த வெளிசந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளையும், அதில் உரைக்கப் பட்ட சுவிசேஷத்திற்குத் திரளானோர் செவிகொடுக்கவும் கர்த்தர் கருணை காட்டினார். தேவ்காத் கிராம மஞ்சிபாயைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலை செய்தார். அதிக காய்ச்சல் மற்றும் தொற்றுநோயிற்கான அறிகுறிகளுடன் வேதனைப்பட்ட அனில்பாய், வந்தனா, ரேவதி பேன் மற்றும் மகான்பாய் ஆகியோரையும், பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த ரெந்தா கிராம ஜீமினிபேனையும் தேவன் பூரணமாய்க் குணப்படுத்தியமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காதிகுடி கிராம சீமான்பாயைத் தொண்டை புற்றுநோயிலிருந்தும், தேவ்காத் கிராம வினோத்பாயை மஞ்சள்காமாலை நோயிலிருந்தும் மற்றும் இம்துகாரா கிராம தான்கிபேனைக் கன்னத்தில் வந்திருக்கும் கட்டியிலிருந்தும் தேவன் குணப்படுத்த; தேவ்காத் கிராம முகேஷைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; நமது புதிய வாலிப விசுவாசிகளான அனில், பூமி, ஹர்சில், வந்தனா, நிரவ், சந்தியா, சஞ்சனா மற்றும் அலிஷா ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது சுதேச ஊழியர்களான சுனில் லால், ராவ்ஜிபாய், சூராஜிபாய், வாலிபத்தலைவர்கள் மற்றும் துடிப்பாகச் செயல்படும் விசுவாசிகள் யாவரும் கிறிஸ்துவின் ஊழியத்தில் உறுதியாக ஈடுபட; 5 கிராமங்களிலுள்ள நமது 116 புதிய தொடர்பாளர்கள் இரட்சிப்படைய; கம்திபேன் மற்றும் ஜாகுபாய் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுத் திருச்சபையில் இணைய ஆயத்தமாகும் சனாதனா மற்றும் ராகிபுரா கிராம இளம் விசுவாசிகள் மற்றும் தர்ஷதா கிராம சுனிதா, ராஜுபாய் குடும்பம் ஆகியோருக்காகக் கர்த்தரிடம் ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### போரடி: ஓம் பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** புதிதாக 34 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் அடைக்கலம் புகுந்துள்ளனர். முதன்முறையாக 5 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. வகினியாபானி கிராம கவாபாயை மின்சார அதிர்வினால் உண்டான பெரும் ஆபத்தினின்று தேவன் பாதுகாத்தார். ஃபத்தேபூர், வகாபாடா, நியூபோரடி, நவபாடா, சாந்த்சூரியா ஆகிய கிராமங்களில் பஜன் கூடுகைகள் நடத்தவும், திரளான புதிய ஜனங்கள் அதில் கலந்துக்கொள்ளவும் கர்த்தர் ஒத்தாசை காட்டினார். சபலபாடா, அதலபாடா, தலியாமுச்ரா, ஜீனாபானி மற்றும் ஜெந்தி யாஞ்சன் ஆகிய கிராமங்களில் வெளிசந்திப்புக் கூட்டங்கள் நடைபெற கர்த்தர் தயவு காட்டினார். ஃபத்தேபூர், சண்டி, பாவர்பாடா மற்றும் கொடிதா ஆகிய கிராமங்களில் நடைபெற்ற உபவாச ஜெபக்கூட்டங்களைத் தேவன் அநேகருக்குப் பிரயோஜனமாக்கித் தந்தார். பாவர்பாடா, நந்தேத், அஞ்ஜன்தா மற்றும் உமர்தா ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக வேதாகம வகுப்புக்குழுக்கள் நடைபெறுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திக்கிபொய்தி கிராம கணேஷ்பாய் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; புதாகி விஹார் கிராம இசாராம்பாயைச் சரீர தோல் ஒவ்வாமைநோயிலிருந்தும், சாக்கடு கிராம ராபின்பாயைத் தூக்கமின்மை யிலிருந்தும், உமர்தா கிராம மொகராபாயை ஆஸ்துமா வியாதியிலிருந்தும், ராணிஜிரா கிராம இந்தாஸ்பாயைச் சரீரக்கட்டியிலிருந்தும் மற்றும் மஞ்சனி கிராம சுந்தர்சிங்பாயைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்க ஜெபிப்போம்.

## 24 பிப்ரவரி
புதன்
*உபவாச ஜெபநாள்*

### சாலீஸ்காவ்: திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. மலன்காவ் பகுதியில் நடைபெற்ற 2 நாட்கள் வாலிபர் கூடுகையைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். கோதாலி கிராமத்திலிருந்து ஒரு புதிய குடும்பம் வெளிசந்திப்பு ஊழியத்தின் மூலம் கிடைத்துள்ளது. வாலிபர்கள் கூடுகை, ஞாயிறு ஆராதனைகள், உபவாச ஜெபங்கள், பெண்கள் கூடுகை, விசுவாசிகளின் பயிற்சிக்கூடுகை மற்றும் பிற கூடுகைகள் யாவையும் கைபேசி கூட்டிணைப்பு அழைப்பு மூலம் நடத்தி முடிக்க தேவன் உதவிக்கரம் கொடுத்த தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோதாலி கிராமத்தில் புதிய ஆராதனைக் குழுவொன்று ஆரம்பிக்கப்பட; கெட்ட ஆவியின் பிடியிலிருந்து விட்டாபாய் விடுதலை பெற; வயிற்றுக்கட்டியிலிருந்து மங்கலாபாயும், சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து ஷோபா சின்தேயும் மற்றும் மனநோயிலிருந்து நிலேஷ் மற்றும் சுபம் ஆகியோரும் முழுசுகம் பெற; குடிப்பழக்கத்திலிருந்து சந்தீப் பகவான் சின்தே விடுபட; நமது விசுவாசிகளான சுபம் மற்றும் சீமாவிற்கு நல்ல வாழ்க்கைத்துணைகளமைய; புலம்பெயர்ந்துள்ள நமது விசுவாசிகள் விசுவாசத்தில் பெலப்பட; சாலீஸ்காவ் பணித்தளத்திற்கு நல்ல சுதேச ஊழியர் கிடைக்க ஜெபிப்போம்.

### டெக்கான்: விஜயன் & ஜெபரோஸ்

**துதிக்க:** புதிதாக 73 நபர்கள் கிறிஸ்து வண்டை சேர்ந்துள்ளனர். காத்சந்தூர் பணித்தளத்தில் வெளிசந்திப்பு ஜீப்குழு ஊழியம் சிறப்பாக நடைபெற தேவன் உதவிச்செய்தார். காத்சந்தூர் பணித்தளத்தைச் சார்ந்த புனகுடா கிராமத்தினரின் சுவிசேஷ எதிர்ப்புக்கரங்களுக்கு விலக்கித் தேவன் நமது ஊழியரையும், சுதேச ஊழியர்களையும் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கன்பஹாடி, பரே மற்றும் நிஷாங் ஆகிய கிராம விசுவாசிகள் எதிர்ப்பைக் கண்டு அஞ்சாதபடி விசுவாசத்தில் துணிவுடன் நிற்க; அசிஃபாபாத் பணித்தள ஊழியத்தைத் தடுக்கும் நமது முன்னாள் சுதேச ஊழியர் மனந்திரும்ப; வெளிசந்திப்பு ஊழியங்களில் ஆர்வமாக ஈடுபடுவதற்கு சுதேச ஊழியர்கள் தங்களை அர்ப்பணிக்க; விட்டல்வாடா, வேல்குர், உமனூர், கட்டா, பன்தே, கேரோமரி ஆகிய நமது வெளிசந்திப்பு ஊழிய மையங்களில் திரளான ஆத்துமஅறுவடை கிடைக்க ஜெபிப்போம்.

### *ஏழையின் ஐசுவரிய விசுவாசம்!*

*உத்தரகாண்ட், பஸ்பூர் பணித்தளம், கரிம்பூர் கிராமத்தில் ஏற்கனவே அதிக வறுமைக்குட்பட்டு வாழ்ந்துக் கொண்டிருந்த சோனு என்ற பெண்மணி, தனது அடிப்படை வாழ்வாதாரத் தேவைக்கென மிக அவசியமாக வைத்திருந்த ரூ.30,000/-க்குப் பெறுமான அவரது மாடும் அதன் கன்றுக்குட்டியும் திடீரென தொலைந்து விட்டன. அவர் தொலைந்துப்போன தனது மாட்டையும், கன்றுக்குட்டியையும் மீண்டும் கர்த்தர் தனக்குக் கட்டாயம் கிடைக்கச் செய்வார் என்று ஒரு பெரிய ஆழமான விசுவாசத்தைக் கர்த்தர் மீது வைத்து, தனது தரித்திரத்தின் மத்தியிலும் விசுவாசத்தில் ஐசுவரியமுள்ளவராகத் தவறாமல் நமது ஆலய ஆராதனைக்கு வந்துச் செல்கிறாா். அவரது இத்தகைய விசுவாசத்தை வாய்க்கப்பண்ணும்பொருட்டு, பூலோக பொருளாதாரம் மற்றும் பரலோக ஆவிக்குரிய நன்மைகளால் அப்பெண்மணியின் வாழ்வைக் கர்த்தர் நிரப்ப நாம் நமது ஜெபங்களில் அவரைத் தொடர்ந்து தாங்குவோமாக!*

## 25 பிப்ரவரி
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஏஞ்சல் ஜெபா ஹென்றி
திருமதி. சுப்ரா பாக் மிண்டு குட்டும்
திருமதி. சாரதி அருண்குமார், திருமதி. சுமதி கணேஷ்
திருமதி. நீது தினேஷ் குமார்

### காண்ட் பாரா:
### பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஷ்வரி

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கத் துவங்கியுள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கோஹல் பாடா கிராமத்தில் நடைபெற்ற முக்கியத் தலைவர்களுக்கான பயிற்சிக்கூடுகையையும், கேவடிபாடா, கோல்ஹர் மற்றும் ஹம்சரபாடா ஆகிய 3 கிராமங்களில் நடந்த வெளிசந்திப்பு ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். கடந்த மாதத்திலிருந்து புதிய 3 குடும்பங்கள் தவறாமல் ஞாயிறு ஆராதனைகளில் கலந்துக்கொள்கின்றனர். கர்ப்பப்பை பிரச்சனையிலிருந்து தேவன் சோனாலியைப் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக நமது கூட்டங்களில் கலந்துக்கொள்ளும் விஷ்வாஸ், கோவிந்த் மற்றும் மஞ்சுளா ஆகியோருடைய குடும்பத்தினரின் இரட்சிப்பிற்காக; நமது விசுவாசிகளான ரேவாபாயை முதுகெலும்பு வலியிலிருந்தும், சுனந்தாவை இரத்தப் போக்கிலிருந்தும், யாக்கோபை மூளைக் கட்டியிலிருந்தும், விஷ்வாஸைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; தாவலிபாடா மற்றும் கடகிபோடா ஆகிய கிராமங்களில் கிரமமாக நடைபெறக்கூடிய ஜெபக்கூட்டங்கள் துவங்கப்பட; ஆராதனைக்கு வர தடை செய்யும் சுமாபேனின் கணவர் மனம் மாற; நமது ஊழிய வளர்ச்சிப்பணியின் நிகழ்ச்சிகளின் வரம்புகளைக் குறித்து முக்கிய தலைவர்களுக்கு நல்லப் புரிதலுண்டாக; ஆராதனை நடத்தத் தடைபண்ணும் நமது பொடா பகுதி சபை மூப்பர் மனம் மாற; நமது விசுவாசி கரண்சிங்கின் மகன் தானியேலுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைக்க ஜெபிப்போம்.

### கான்தேஷ்பீலி வேதாகம மொழிப்பெயர்ப்புப்பணி & நேர்:
### அஜய்குமார் லிமா & பிரத்யாசினி

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக 16 கிராமங்களில் இயேசுவின் அன்பு பறைசாற்றப்பட்டுள்ளது. தங்கள் மொழியில் மொழிப்பெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாட்டை பீல் மக்கள் உற்சாகமாகப் பயன்படுத்துகின்றனர். தர்கேல் கிராமத்தில் புதிய ஆராதனைக்குழுவொன்று தொடங்கப்பட்டுள்ளது. குன்பி சமுதாயத்தினரில் 60 நபர்கள் புதிதாகச் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். சுவிசேஷத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த வஸ்மார் கிராமப்பெண் கலாபாய் தற்போது கிறிஸ்தவ விசுவாசியாக மாறியுள்ளார். கலாம்பீர் கிராம மன்யா என்ற சிறுவனை முழுசரீர வீக்கத்திலிருந்தும், ஜிர்யாதல் கிராம லாவுவைக் குடல் வீக்கத்திலிருந்தும் தேவன் குணமடையச் செய்தார். தர்கேல் கிராமத்திலிருந்து 2 குடும்பங்களும் மற்றும் நாகை கிராமத்திலிருந்து ஒரு புதிய குடும்பமும் இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள தேவன் கிருபை காட்டினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பழைய ஏற்பாடு காந்தேஷ் பீலி மொழியில் விரைவில் மொழிப்பெயர்க்கப்பட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருப்போர் மீண்டும் கிறிஸ்துவின் மந்தையில் இணைய; இருதயத்துளை பிரச்சனையினால் அவதிப்படும் 3 வயது சிறுவனான ஈஸ்வர் சோனானிக்குத் தேவன் நல்ல சுகம் தர; பாத்னி கிராமத்தில் ஓர் புதிய ஆராதனைக்கூட்டம் நடத்தப்படவும், பெஹத் கிராமத்தில் மீண்டும் ஆராதனைக்கூட்டம் தொடங்கப்படவும் ஜெபிப்போம்.

## 26 பிப்ரவரி
வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. சுரேஷ் ஜோசப்

### சித்தாரா பிராந்தியம் :
**சஞ்சீப் குமார் & ஸ்வர்ணலதா**

**துதிக்க:** புதிதாக 25 நபர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 28 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் உதிர்க்கப்பட்டுள்ளன. 6 இடங்களில் வேதாகம வகுப்புக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தபாபாடா கிராம நலுபாயை மனநோயிலிருந்து தேவன் சுகப்படுத்தினார். போதனி கிராம ராம்தாஸைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது பல்வேறு ஊழிய நிகழ்ச்சிகளின் மூலமாகச் சத்தியத்தைக் கேட்டறிந்திருப்போர் இயேசுவை இரட்சகராக ஏற்க; லெங்கதி கிராமத்திலுள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; ஜெபத்தின் மூலம் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்ட முன்னாபாயின் இரட்சிப்பிற்காக; பிசாசுகளின் பிடியிலிருந்து திப்லிபாய் விடுதலை பெற; நமது சுதேச ஊழியர்களும் விசுவாசிகளும் ஆத்துமபாரம் கொண்டு, வெளிசந்திப்பு ஊழியங்களில் ஆர்வமாக ஈடுபட ஜெபிப்போம்.

## கர்நாடகா

### கோலார்: திம்மேஷ் & கவிதா

**துதிக்க:** வேமகல் ஆலயத்தின் தரை கட்டுமானப்பணி சிறப்பாக முடிந்துள்ளது. தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் காயத்ரியை விடுவித்தார். ராமாபூர் கிராம மனோஜிற்குத் தேவன் தகுந்த வேலையைக் கட்டளையிட்டார். விவசாயப்பயிர் நிலத்தில் பணி செய்துக் கொண்டிருக்கும் போது தனது இரு கால்களுக்கிடையே சென்றப் பாம்பின் கடிக்கு விலக்கி, தேவன் பையம்மாவைப் பாதுகாத்தார். மின்சார அதிர்ச்சியினின்று தேவன் நமது விசுவாசி நீத்துவை அதிசயமாக உயிர் பிழைக்கச் செய்த தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முந்தைய நாட்களில் சுவிசேஷத்திற்கு எதிர்ப்புத்தெரிவித்து, தற்போது நமது ஆலய ஆராதனைக்குத் தொடர்ச்சியாக வந்துக்கொண்டிருக்கும் சிவப்பாவின் இரட்சிப்பிற்காக; வெளி சந்திப்பு ஊழியம் மற்றும் திருச்சபை செயல்பாடுகள் ஆகியவற்றில் நமது இளம் விசுவாசிகள் ஆர்வத்துடன் செயல்பட; கடன் பிரச்சனைகளினாலும், தவறான குற்றச்சாட்டுகளினாலும் நீதி மன்ற வழக்குகளில் சிக்கித் தவிக்கும் நமது விசுவாசிகளின் விடுதலைக்காக; புற்றுநோய் மற்றும் பிற வியாதிகளிலிருந்து சீத்தாம்மா, பிரபாவதி, சுசிலாம்மா, ஸ்ரீகாந்த் மற்றும் சௌதம்மா ஆகியோர் அற்புத சுகம் பெற; தங்களுக்குக் கொடுக்கப்படும் சுதந்தரத்தைத் தவறாகப் பயன்படுத்தி ஊழியத்திற்குத் தடைகளாக மாறும் நமது ஸ்ரீனிவாச புரா பகுதி விசுவாசிகளின் மனமாற்றத்திற்காக; கங்கட்டா ஆலயத்தில் சீரமைப்புப்பணியாக நடைபெறும் கழிவறை மற்றும் மேற்கூரைப்பணிகள் யாவும் சிறப்புடன் நடந்து முடிய; சபை மூப்பர்கள் யாவரும் கிறிஸ்துவில் நன்கு வளரவும், தங்களது திருச்சபைகளை நேர்த்தியாகக் கிறிஸ்துவின் பாதையில் முன்னின்று வழிநடத்திச் செல்லவும் ஜெபிப்போம்.

## 27 பிப்ரவரி

சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நியாங் கன் மன் உம் பியாக் லல்
திருமதி. அனிதா ஷிஷுபால்

### ஹூப்ளி பிராந்தியம்:

**சுனில் தத்தகாரா & மீனாக்கி**

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். முண்ட்காட் பணித்தள சுரேஷை விபத்தினால் ஏற்பட்ட சுயநினைவின்மையிலிருந்தும், மஞ்சுநாத், நிக்கிதா மற்றும் கிருஷ்ணாவை டெங்கு காய்ச்சலிலிருந்தும் தேவன் விடுவித்தார். முண்ட்காட் பணித்தள பிரேமாவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் காப்பாற்றினார். ஷிகான் பணித்தள நமது விசுவாசி சுரேஷின் குடும்பத்தில் திருமணமாகி அநேக வருடங்களுக்குப் பின், கர்த்தர் குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட்டுள்ளார். பிபிவாடி பணித்தள நமது விசுவாசி ராஜுவின் புதிதாகத் தோண்டப்பட்ட கிணற்றில் ஜெபத்தின் மூலம் தேவன் நல்ல தண்ணீர் சுரந்துவர கிருபை செய்தார். நிதாகுந்தி பணித்தளத்திலிருந்து 4 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்திருக்கிறதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கஜேந்தரகடா பணித்தள சங்கரின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவ; முண்ட்காட் பணித்தள நமது விசுவாசி ஷானையா மழலை பாக்கியம் பெற; முண்ட்காட் பணித்தள ரேணுகாவை வயிற்றுக்கட்டி பிரச்சனையிலிருந்தும், 18 வயது நிரம்பிய சகுந்தலாவை இருதயக் கோளாறிலிருந்தும் தேவன் சுகமாக்க; நிதாகந்தி பணித்தள சந்தோஷ், ராஜு, அபிஜித் மற்றும் அபிஷேக் ஆகியோர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கைச் செய்ய ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### மதனபள்ளி:

**வெங்கடேசன் & சசிகலா**

**துதிக்க:** தண்டலூரு மற்றும் தெக்குல பாளையம் ஆகிய கிராமங்களில் நடந்த பொது வெளிசந்திப்பு நிகழ்ச்சிகளைத் தேவன் ஏராளமான மக்களுக்கு ஆசீர்வதித்துக் கொடுத்தார். பலதரப்பட்ட சுகவீனங்களிலிருந்து சுமித்ராவையும், தீராத சரீரவலியினின்று ரெத்னாவையும் தேவன் முழுமையாகக் குணமாக்கினார். தெக்குலபாளையம் பகுதியில் நடைபெற்ற உபவாச ஜெபக்கூட்டத்தைத் தேவன் ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தோல் ஒவ்வாமைநோய் மற்றும் சரீரக்கட்டிகளினிமித்தம் தங்களது 3 பிள்ளைகளை இழந்து, 4-வது பிள்ளையைப் பாதுகாக்கத் துடிக்கும் நவீனா மற்றும் மல்லிகார்ஜுனிற்காக; மூட்டுவலி மற்றும் தீராத பெலவீனங்கள் ஆகியவற்றிலிருந்து மங்கம்மா, கங்குலம்மா மற்றும் பாப்புலம்மா ஆகியோர் சுகமடைய; சங்கர், ராஜம்மா மற்றும் அவர்களது மகன்கள் யாவரும் குடிப் பழக்கத்திலிருந்து விடுபட்டு இரட்சிக்கப் பட; தேவ இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கும் ரத்னம்மாவின் குடும்ப மக்களுடைய மனஆறுதலுக்காக ஜெபிப்போம்.

## 28 பிப்ரவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வினு பி., திரு. சாமுவேல் ஜே.
செல்வி. ஜரின் லெட்தேங்மாங் ஹவ்கிப்

### அனந்தப்பூர் பிராந்தியம்/ சில்லமத்தூர்:

**பால் ரவிராஜ் & ஹேமலதா**

**துதிக்க:** புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவைக் குறித்து அறிந்து அவரை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 34 கிராமங்களில் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. 17 இடங்களில் நடைபெற்ற வெளிசந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளைக் கர்த்தர் பெருமளவில் ஆசீர்வதித்துத் தந்தார். தர்மவரம் பணித்தள அபர்ணா, ரோதம் பணித்தள ஆஷா மற்றும் சில்லமத்தூர் பணித்தள சூசன்னா ஆகிய மூவருக்கும் தேவன் சுகப்பிரசவத்தைக் கட்டளையிட்டார். மொழி உச்சரிப்புப்பயிற்சி கொடிகொந்தா திருச்சபையில் வைத்து வெற்றியாக நடந்து முடிந்தது. ஆலயச்செயல்பாடுகளில் திருச்சபை மூப்பர்கள் உற்சாகமாகக் கலந்துக்கொண்டு, தங்களது திருச்சபையினரைத் தாங்களே முன்னின்று கிறிஸ்துவிற்குள் வழிநடத்திச் செல்கிறதற்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷ வசனங்கள் மீது நாட்டம் காட்டும் கங்காதரி, வெங்கடராமுலு, அனிதா மற்றும் சங்கரா ஆகியோர் இரட்சிக்கப்பட; புதிய பகுதிகளுக்கும் சென்று நமது ஊழியங்களை விரிவாக்கம் செய்ய; ரோதம், கொடுரு மற்றும் பூதலி ஆகிய கிராமங்களில் நமது ஊழியவளர்ச்சிப்பணி திட்டங்களைச் செயல்முறைப்படுத்த தேவையான நிலங்கள் வாங்கப்பட; உள்ளூர் விசுவாசிகள் நமது ஊழியங்களில் ஊக்கத்துடன் செயல்பட; இளம் விசுவாசிகளின் நற்சாட்சியுள்ள வாழ்விற்காக; வெளிசந்திப்பு மற்றும் பின்தொடர்பணி போன்ற ஊழிய நிகழ்ச்சிகள் ஒன்றொடொன்று இசைந்து நடைபெற; சத்தியத்தைக் கேட்டோர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; விபத்தினிமித்தம் ஏற்பட்ட காலெழும்பு முறிவிலிருந்து வனுரப்பப்பள்ளியைச் சார்ந்த முத்தயலப்பாவைத் தேவன் பூரணமாகச் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### தேன்கனிக்கோட்டை:

**ஜெபராஜ் & எஸ்தர் தங்கம்**

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் இயேசுகிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்துச் சேர்ந்துள்ளனர். மாரகட்டா, சிக்கேபுரம், அந்தவனபள்ளி, கரந்தபள்ளி மற்றும் மௌனகம்பள்ளி ஆகிய இடங்களில் நடந்த வெளிசந்திப்பு ஊழியங்களைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்ததோடு, அநேகர் சத்திய வசனத்திற்குச் செவிமடுக்கவும் உதவிப்புரிந்தார். சிக்கேபுரத்தில் அனைத்து ஞாயிறும் நடைபெறும்விதத்தில் வீட்டுமனை ஆராதனையொன்று தொடங்கப்பட்டுள்ளது. நமது ஆராதனைக்குத் தவறாமல் வந்துக் கலந்துக்கொள்ளும் நமது விசுவாசிகளான மோசஸ், அன்பு மற்றும் காபிரியேலைத் தேவன் எல்லாத் தீமைகளுக்கும் விலக்கிப் பாதுகாத்து வருகிறார். அந்தவனபள்ளி ஆலயத்தின் சீரமைப்புப்பணியில் தேவகரம் உடனிருந்தது. ராஜ்குமார் மற்றும் ஜாய் ஆகியோரது திருமணம் எந்தப் பிரச்சனையுமின்றி அழகாக நடந்து முடிந்ததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிக்கேபுரம் விசுவாசிகளுக்கு ஒன்றுக்கூடி கர்த்தரை ஆராதிக்க ஒரு தற்காலிக இடம் கிடைக்க; தங்களது பெற்றோர்களான நமது சுதேச ஊழியர்கள் புஷ்பராஜ் மற்றும் அவரது மனைவி அனிதாவை இழந்துத் தவிக்கும் அவர்களது பிள்ளைகளின் மன ஆறுதலுக்காக; ஓசாஹள்ளி கிராம சிவகுமாரின் இரட்சிப்பிற்காக; மாரகட்டா மற்றும் அந்தவனபள்ளி ஆகிய பகுதிகளில் வாழும் விசுவாசிகள் யாவரும் ஒன்றிணைந்து மாதந்தோறும் வெளிசந்திப்பு ஊழியம் செய்ய வேண்டுமென்று தாங்கள் எடுத்திருக்கும் தீர்மானத்தில் திடமாக நின்றுச் செயல்பட ஜெபிப்போம்.

எமது புத்தம் புதிய வெளியீடுகளை

# வாங்கிப் பயன்பெறுங்கள் !







## புதிய பென் டிரைவ் அறிமுகம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்

காலத்தால் அழியாத ஆதிதரிசன மிஷனெரிப்பாடல்கள் இவை!

**இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களால் எழுதப்பட்டு, இக்காலத்துக்கேற்ப இசையமைக்கப்பட்டு, இந்திய தமிழ் திருச்சபைகளில் ஆவிக்குரிய அதிர்வலைகளை உருவாக்கிவரும் இனியப் பாடல்கள் இவை!**

கேளுங்கள்...
பரி.ஆவியானவர் நம்மில் நிச்சயம் இடைபடுவார்!

வாருங்கள்...
இந்தியர்களை இயேசுவுக்குச் சொந்தமாக்க இணைந்துச் செயல்படுவோம்!




Regd. Newspaper for India No.17759/69

# Magazines for the year April 2021 – March 2024

Friends Missionary Prayer Band invites sealed tender for printing of the monthly magazines, ‘Araikooval’ & ‘Friends Focus’ in Tamil and English,36 issues in each of these languages respectively for a period of 3 years from April 2021 to March 2024.

## Specification

| Magazine | No. of copies | Size | Language |
|---|---|---|---|
| ARAIKOOVAL | 75000 | 182 X 133 | Tamil |
| FRIENDS FOCUS | 15000 | 182 X 133 | English |

## Conditions

- The printer should have minimum 10 years of experience in magazine printing (colour)
- Printer should ensure the completion of work by 23rd of every month from the date of awarding the work order.
- Earnest Money Deposit: Rs.1,00,000/-

## Tender Program

Supply of Tender document upto 5 pm of 12.02.2021
Date of submission upto 12 pm of 19.02.2021
Date of Opening tender 11 am on 22.02.2021

Tender documents (free of cost) can be obtained in person or by post from the Secretary, Communication FMPB 29 High School Road, Ambattur, Chennai - 600 053 on submission of documentary proof for having 10 years of experience in Magazine (colour) printing. **Contact- FMPB 044-26570404**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Thomson Press India Ltd., A-9, Industrial Complex, Maraimalainagar - 603 209 ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***